நன்னட-
த்தைக்
கோ-
ட்பாடு

NOKIA

வணிகம் என்பது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கை நேர்மையின் அடிப்ப-டையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

உங்கள் முடிவுகள் முக்கியத்துமானவை.

பொருளடக்கம்

நமது தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியிடமிருந்து ஒரு செய்தி 4
குறிக்கோள் மற்றும் நோக்கம் 5
எங்கள் நன்னடத்தைக் கோட்பாடுகளின் நான்கு கொள்கைகள் 6
உங்கள் பொறுப்புகள் 7
பொறுப்பு வட்டம் 8
Nokia நன்னெறிசார் முடிவெடுக்கும் மாதிரி 9

Nokia-வின் இணக்கக் கொள்கைகள் **11**
‘நாங்கள் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம் **12**
கருத்து வேற்றுமை 12
அரசு அதிகாரிகளுடன் செயல்படுதல் 14
நியாயமான போட்டி 16
முறையற்ற பணம் செலுத்தல்கள் 18
வர்த்தக இணக்கம் 20
மூன்றாம் தரப்பினருடன் பணிபுரிதல் 22
நாங்கள் எங்கள் மக்களையும் சமூகத்தையும் மதிக்கிறோம் **24**
சுற்றுச்சூழல் 24
நியாயமான வேலைவாய்ப்பு 26
சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் சூழ்நிலைகள் 28
மனித உரிமைகள் 30
தனியுரிமை 32
நாங்கள் எங்கள் சொத்துக்களைப் பாதுகாக்கிறோம் **34**
கட்டுப்படுத்தும்தன்மை 34
அறிவுசார் சொத்து மற்றும் ரகசியத் தகவல் 36
உள்ளக வர்த்தகம் 38

வெளிப்படையாகப் பேசுதல் **40**
கவலைகளுக்குத் தீர்வு காணுதல் 41
குறைதீர்ப்புத் திட்டம் 42

இந்த நன்னடத்தைக் கோட்பாடுகளுக்கு 14 இணக்கக் கொள்கைகள் உள்ளன, அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு விரிவான உள் கொள்கை, ஒரு நிலையான இயக்க நடைமுறை (SOP), வழிகாட்டுதல்கள் அல்லது ஒரு செயல்முறை ஆவணம்ஆகியவை துணை புரிகின்றன.

அத்தகைய உள்ளக ஆவணங்கள் மற்றும் செயல்முறைகளுடன் தொடர்புடைய இந்தக் கொள்கைகளையும் ஊழியர்கள் படிக்க வேண்டும்.



நமது தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியிடமிருந்து ஒரு செய்தி

நமது நிறுவனம் தனிநபர்களின் ஒரு தொகுதி மட்டுமல்ல. நாம் அனைவரும் ஒரே குழு.

அதாவது, நாம் ஒன்றாகச் செயல்படும் முறையும், பரந்த உலகத்துடன் நாம் கொண்டுள்ள தொடர்பும், நம்மில் ஒவ்வொருவரிலும் பிரதிபலிக்கிறது.

நோக்கியாவின் நடத்தை விதிமுறைகள் நமது விழுமியங்களைச் செயல்பாட்டில் ஒருங்கிணைக்கின்றன. அது நாம் எடுக்கும் முடிவுகளுக்கும், நாம் ஒருவரையொருவர் நடத்தும் முறைக்கும், மேலும் நமது வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் சமூகங்களிடம் நாம் எவ்வாறு நம்பிக்கையை உருவாக்குகிறோம் என்பதற்கும் வழிகாட்டுகிறது.

ஏதேனும் சரியாக இல்லை என்று உணரும்போது வெளிப்படையாகச் சொல்லுவது, நேர்மையாக செயல்படுவது, தம்மையும் – மற்றும் ஒருவருக்கொருவரையும் – பொறுப்புள்ளவர்களாக வைத்திருப்பது உட்பட இந்தத் தரவரையறைகளை நிலைநிறுத்துவதில் நாம் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கிறோம். இவ்விதமாகவே மக்கள் வளர்ச்சி அடையும் ஒரு கலாச்சாரத்தை நாம் உருவாக்குகிறோம், நமது நிறுவனம் வெற்றி அடைகிறது.

அனைத்து நோக்கியா ஊழியர்களும் தங்கள் அன்றாடப் பணிகளில் நமது நடத்தை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், மேலும் நமது கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் கருவிகளுடன் இணக்கத்தன்மையை நிலைநிறுத்துவதற்காக தொடர்ச்சியாக கற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்திக்கொள்வதற்கும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விதமாகவே நாம் மிக உயர்ந்த நெறிமுறைத் தரவரையறைகளைக் கடைப்பிடிக்கிறோம், மேலும் வெளிப்படைத்தன்மைக்கும் நேர்மைக்கும் மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கும் ஒரு சூழலை உருவாக்குகிறோம்.

மனிதத் திறன்களை அதிகபட்சமாக்கும் தொழில்நுட்பத்தையும், நம்பிக்கையின் அடித்தளத்தில் இருந்து நீண்டகால மதிப்பையும் உருவாக்குவதே நமது இறுதி இலக்காகும்.

ஜஸ்டின் ஹோட்டார்ட்

தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி

குறிக்கோள் மற்றும் நோக்கம்

குறிக்கோள்

இந்த நன்னடத்தைக் கோட்பாடு அத்தியாவசிய விதிகளை முன்வைத்து, Nokia சார்பாக செயல்படும் நாம் அனைவரும் மாறாத நேர்மையுடன் செயல்பட்டு, நம்மை நிர்வகிக்கும் எண்ணற்ற விதிகள், விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்கி செயல்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

எங்கள் முழு வணிகமும் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது; உண்மையில், அது இல்லாமல் எங்கள் பங்குதாரர்கள் எங்களுடன் வேலை செய்ய மாட்டார்கள். இந்த நம்பிக்கையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கம்யூனிட்டியிலும் எங்கள் எல்லா வணிக நடவடிக்கைகளிலும் ஈட்டுவதற்கான எங்கள் தனிப்பட்ட உறுதிப்பாட்டை எங்கள் நடத்தை நெறிமுறை வெளிப்படுத்துகிறது. இந்த நம்பிக்கையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கம்யூனிட்டியிலும் எங்கள் எல்லா வணிக நடவடிக்கைகளிலும் ஈட்டுவதற்கான எங்கள் தனிப்பட்ட உறுதிப்பாட்டை எங்கள் நடத்தை நெறிமுறை வெளிப்படுத்துகிறது.

நோக்கம் மற்றும் பொருந்தக்கூடிய தன்மை

நோக்கியா தான் பங்கு வகிக்காத, அல்லது தனது முழுமையான கட்டுப்பாட்டினை கொண்டிராத, அதே நேரம் தான் எதோ ஒரு வகையில் தொடர்புள்ள நிறுவனங்களில் தனது நடத்தை விதிகளை பின்பற்றுவதற்கான அனைத்து நன்னம்பிக்கை முயற்சிகளையும் மேற்கொள்ளும் அதேபோல், தனது நடத்தை விதிகளை வர்த்தக வழங்குநர்கள் மற்றும் பிரதிநிதிகள் பின்பற்றுவதை உறுதி செய்யும். நோக்கியா வின் மூன்றாம் தரப்பினர் அனைவருமே எங்கள் மூன்றாம் தரப்பு நடத்தை விதிமுறைகளால் கட்டுப்பட்டவர்களாவார்கள், அதனை இங்கே காணலாம். https://www.nokia.com/en_int/investors/corporate-governance/code-of-conduct.

இந்த நன்னடத்தைக் கோட்பாடு Nokia வின் இயக்குநர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும், Nokia விற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனங்களின் கிளை நிறுவனங்களுக்கும் பொருந்தும். Nokia பெரும்பான்மையான பங்குகளை வைத்திருக்கும் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பிற வணிக நிறுவனங்களின் கூட்டுத் தொழில் போன்றவை இயக்குநர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தும்.

நோக்கியா தான் பங்கு வகிக்காத, அல்லது தனது முழுமையான கட்டுப்பாட்டினை கொண்டிராத, அதே நேரம் தான் எதோ ஒரு வகையில் தொடர்புள்ள நிறுவனங்களில் தனது நடத்தை விதிகளை பின்பற்றுவதற்கான அனைத்து நன்னம்பிக்கை முயற்சிகளையும்.

எங்கள் நன்னடத்தைக் கோட்பாடுகளின் நான்கு கொள்கைகள்

நாம் வணிகம் செய்யும் நாடுகளின் சட்டங்களுக்கு இணங்கி நடக்கிறோம் மேலும் Nokia வின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளையும் பின்பற்றுகிறோம்.

நாங்கள் தனிப்பட்ட முறையில் நேர்மையாகவும் நியாயமாகவும் இருப்பதன் மூலம் ஒருவருக்கொருவரும் எங்களது பங்குதாரக-ளுக்கும் உதாரணமாகத் திகழ்கிறோம்.

ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை நாங்கள் ஊக்குவிக்கிறோம் பரஸ்பர மரியாதை, ஒருவருக்கொருவர் மீதான நம்பிக்கை மற்றும் எங்கள் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நன்னெ-றிகளின் உயர் தரங்கள் மூலமாக நாங்கள் கலாச்சார ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கிறோம்.



இந்தக் கோட்பாடுகளுக்கு நாங்கள் ஒருவருக்கொருவர் பொறுப்பேற்கிறோம், மற்றும் சாத்தியமான விதிமீறல்கள் இருப்பதாக அறிந்தால் அவற்றைப் பற்றி உடனடியாகப் புகாரளிக்கிறோம்.

உங்கள் பொறுப்புகள்

நடத்தை விதிமுறை Nokia ஊழியர்கள் மற்றும் வணிக கூட்டாளர்களுக்கு ஒருமைப்பாட்டின் உயரிய தரத்தை அமைக்கிறது. நமது அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நன்னெறி சார்ந்த மற்றும் இணக்கமான முறையில் நடந்துகொள்வதற்கான நமது அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது.

எல்லோரும் இந்தக் கோட்பாடுகளை அறிந்துகொண்டு, புரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அது ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்காது அல்லது நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு கடினமான சூழ்நிலையையும் எதிர்பார்த்து தீர்வளிக்காது. சரியான முடிவுகளை எடுக்க உங்களுக்கு உதவும் ஒரு மாதிரியை இது முன்வைக்கிறது - உங்கள் மீதும் நிறுவனத்தின் மீதும் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முடிவுகள். கடினமான முடிவுகளை நீங்கள் தனியாக எடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். கேள்விகளைக் கேட்கவும் வழிகாட்டுதல்களைப் பெறவும் உங்களுக்கு ஏராளமான வள ஆதாரங்களும் வழிகளும் உள்ளன.

எல்லா சந்தர்ப்பங்களிலும், கோட்பாடுகளின் கீழ் வரும் உங்கள் கடமைகள் பின்வருமாறு:

- நன்னடத்தைக் கோட்பாடு மற்றும் அதன் கொள்கைகளைப் படித்தல், புரிந்துகொள்ளுதல் மற்றும் பின்பற்றுதல் மற்றும் தேவைப்படும்போது வழிகாட்டுதலைப் பெறுதல்;
- Nokia வின் பல வழிகளில் ஒன்றின் வாயிலாக எந்தவிதமான மற்றும் அனைத்து இணக்கச் சிக்கல்களையும் பற்றி உடனடியாகப் புகாரளித்தல்;
- சட்ட விரோதமான நடவடிக்கைக்கு வழிவகுக்கும், முறையற்றதாகத் தோற்றமளிக்கும், அல்லது Nokia வின் பெயருக்கு ஊரு விளைவிக்கும் எந்தவொரு நடைமுறைகளையும் தவிர்ப்பது;
- இணக்கத்தைப் பற்றிய கவலையை வெளிப்படுத்துபவருக்கு முழுமையாக ஆதரவு அளித்தால் மற்றும் அவ்வாறு கேள்வியோ அல்லது கவலையையோ வெளிப்படுத்தும் நபருக்கு எதிராக எந்த வகையிலும் பதிலடி கொடுக்காமலிருத்தல்;
- அனைத்து இணக்க விசாரணைகளுக்கும் முழுமையாக ஒத்துழைத்தல்.
- செய்யறிவு பயன்பாடு உட்பட எந்தவித தொழில்நுட்பப் பயன்பாடும் நோக்கியாவின் கொள்கைகள் மற்றும் ஒப்பந்த கடப்பாடுகளுக்கு இணங்குவதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்.

பங்கு மற்றும் பொறுப்பு Nokia தலைவர்கள் மற்றும் வரி மேலாளர்கள்

Nokia வின் தலைவர்கள் - அனைத்து வரி மேலாளர்கள் உட்பட - நன்னெறி மற்றும் இணக்கத்தன்மை சார்ந்த விஷயங்களில் இவர்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் உள்ளன. அவர்கள் தங்கள் நிறுவனங்களில் இணக்கத்தன்மைக்கான பொறுப்பாளிகள் ஆவர், மேலும் இவர்கள் வணிக முடிவுகளை எட்டுவதற்கு மட்டுமல்லாமல், தங்கள் நிறுவனங்கள் முழுவதிலும் நேர்மை அடிப்படையிலான கலாச்சாரத்தை கடைபிடிக்கச் செய்வதற்கும் பொறுப்பானவர்கள் ஆவார்கள். தலைவர்கள் தங்கள் நிறுவனங்களுக்குள் இணக்கத்தன்மைக்கான "முதலாளி" களாகத் திகழ்கிறார்கள் மற்றும் அவர்கள் தங்களுடைய குழுக்களில் இந்தக் கலாசாரத்தை வளர்த்து பின்பற்றச் செய்யத் தவறியதால் உண்டாகும் இணக்க தோல்விகளுக்கான முழு பொறுப்பும் அவர்களுடையதே ஆகும். தலைவர்கள் ஒரு வெளிப்படையான புகாரளிக்கும் சூழலை உருவாக்குவதோடு "வெளிப்படையாகப் பேசும்" கலாச்சாரத்தையும் ஊக்குவிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள தலைவர்கள் கட்டாயமாக, குறைந்தபட்சம்:

- குழு செயல்பாடுகளை பாதிக்கக்கூடிய வணிக இணக்கத்தன்மைக்கு ஆபத்து விளைவிக்கும் பகுதிகளைப் பற்றி அறிந்து கொண்டு அத்தகைய அபாயங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்; இணக்கத்தன்மையைக் கண்காணிப்பதற்காக இலக்குகளை நிர்ணயிக்கலாம்; மேலும் இந்த ஆபத்துப் பகுதிகளைக் கையாள அவர்களுடைய குழு பயிற்சி பெற்றுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்;
- இணக்கத்தன்மையின் முக்கியத்துவத்தைப் பற்றி தங்கள் குழுவிற்குத் தவறாமல் அறிவுறுத்துதல், Nokia நன்னடத்தைக் கோட்பாடுகள் மற்றும் அதன் கொள்கைகள் மீதான அவர்களின் தனிப்பட்ட அர்ப்பணிப்பை - சொற்கள் மற்றும் நடத்தை மூலம் - காணக்கூடியதாகவும், செயலூக்கமாகவும் நிரூபிக்க வேண்டும்;
- சாத்தியமான இணக்கக் கவலைகளை உடனடியாகப் புகாரளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள் மற்றும் எதிர்ப்புகள் ஏதேனும் இருக்கலாம் என்ற அச்சமின்றி ஊழியர்கள் கவலைகளை வெளிப்படுத்த வசதியாக இருக்கும்படியான வெளிப்படையாகப் புகாரளிக்கும் அறிக்கையிடலின் சூழலை வளர்ப்பது;
- உயர்தரமான நேர்மைப்பண்புகளை வெளிப்படுத்தும் நபர்களை மட்டுமே பணிக்கமர்த்தவும் மற்றும் பதவி உயர்வு அளிக்கவும், மேலும் இணக்கத்தன்மை சார்ந்த விஷயங்களில் உயர்தரமான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஊழியர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும்.

பொறுப்பு வட்டம்

நோக்கியாவில், இணக்கம் என்பது ஒரு பகிரப்பட்ட பொறுப்பாகும். நமது நன்னெறி சார்ந்த மதிப்புகள் மற்றும் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் நாம் அனைவருக்கும் ஒரு பங்கு உள்ளது.

நிறுவனத்தின் அனைத்து நிலைகளிலும், பகுதிகளிலும், ஈடுபாடு, பொறுப்புணர்வு மற்றும் நேர்மை கலாச்சாரத்தை தீவிரமாக ஊக்குவிப்பது ஆகியவை **தலைவர்களின்** பொறுப்பாகும்.

கொள்கைகள் மற்றும் விதிகளை அறிந்துகொள்வது மற்றும் புரிந்து கொள்வது, ஏதாவது தவறாக தோன்றும் போதெல்லாம் கேள்விகளைக் கேட்பது மற்றும் ஆட்சேபனைகளை எழுப்புவது ஆகியவை ஒவ்வொரு **பணியாளருக்கும்** உள்ள பொறுப்பாகும்.

இன்றைய வணிகச் சூழலில் இயற்கையாய் அமையப்பெற்ற சிக்கலான மற்றும் மாறுபட்ட அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கான தெளிவினை ஊழியர்களுக்கு ஏற்படுத்தி மேம்படுத்துதல், தெளிவான வழிகாட்டுதல்களை நிறுவுதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை **சட்டம் மற்றும் இணக்க குழுவின்** பங்காகும்.



நெறிமுறை முடிவெடுக்கும் மாதிரி

சாத்தியமான நெறிமுறை சார்ந்த அல்லது இணக்கம் சார்ந்த முடிவுகளை எடுக்கவேண்டிய சூழ்நிலையில், நடவடிக்கை எடுப்பதற்கு முன் இந்த நான்கு கேள்விகளைக் கருத்தில் கொள்ளுங்கள்:

உங்களிடம் போதுமான தகவல் இருக்கிறதா?

ஒரு மேலாளரிடம், சட்டம் சார்ந்த மற்றும் இணக்கம் சார்ந்த அல்லது அவற்றிற்குத் தொடர்புடைய விஷயங்களைப் பற்றி அறிந்திருக்கக்கூடிய, மற்றும் நன்னெறி மற்றும் இணக்கம் தொடர்பான ஒரு விஷயத்தில் நீங்கள் சரியான முடிவு எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கக் கூடியவரிடம் கலந்தாலோசிப்பதைப் பற்றி சிந்திக்கவும்.

இது Nokia வின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்துப்போகிறதா?

முன்மொழியப்பட்ட முடிவு அல்லது நடவடிக்கை Nokia வின் மதிப்புகள், நமது நன்னடத்தைக் கோட்பாடுகள் மற்றும் அதற்குத் தொடர்புடைய கொள்கைகளுடன் பொருந்தவில்லை என்றால், உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்யவும். இதைப் பற்றி நீங்கள் சரியாக உணரவில்லை என்றால், அது நமது மதிப்புகள் மற்றும் இந்த மதிப்புகளை எப்போதும் நிலைநிறுத்த வேண்டிய ஊழியர்களின் நமது எதிர்பார்ப்புகளுக்கு முரணாக அமையலாம்.

ஆம்

தயவுசெய்து தொடரவும். தேவைப்படும்போது வழிகாட்டுதலை நாடுங்கள்.

முடிவு அல்லது நடவடிக்கை சட்டபூர்வமானதா?

முன்மொழியப்பட்ட முடிவு அல்லது நடவடிக்கை பொருந்தக்கூடிய சட்டங்களை மற்றும் விதிமுறைகளை மீறினால், நிறுத்திவிடுங்கள்.நாங்கள் எங்கு வர்த்தகம் செய்தாலும் அங்குள்ள பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு நாங்கள் இணங்குகிறோம்.

இது செய்திகளில் தோன்றினால் சரியாக இருக்குமா?

சட்டபூர்வமான செயல்கள் கூட முறையற்றவையாக இருக்கலாம் அல்லது மற்றவர்களுக்கு அவ்வாறு தோன்றலாம், மேலும் செய்திகளில் தோன்றும்போது அல்லது இணையத்தில் பரவும்போது நம் பெயருக்கும் நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்கலாம்.

Nokia வில் நெறிமுறைகள் மற்றும் நேர்மை பற்றி மேலும் அறியவும்:
நமது வணிகத்தை நேர்மையாக நடத்துதல்[1]

எங்களின் மூன்றாம் தரப்பினர்:
மூன்றாம் தரப்பு நடத்தை விதித் தொகுப்பு[2]

1 https://www.nokia.com/about-us/sustainability/conducting-our-business-with-integrity/

2 https://www.nokia.com/en_int/investors/corporate-governance/code-of-conduct

Nokia வின் இணக்கக் கொள்கைகள்

கருத்து வேற்றுமை

கொள்கை கண்ணோட்டம்

நோக்கியாவின் சிறந்த நலன்களுக்காக நாங்கள் செயல்படுகிறோம். நோக்கியாவின் தகவல்களைப் பயன்படுத்துகிறோம். முதன்மையாக Nokia வின் சொத்து மற்றும் வளங்களை Nokia வின் நன்மைக்காகவும் Nokia வின் வணிகத் தேவைகளுக்கு ஆதரவளிக்கவும் பயன்படுத்துகிறோம்.

Nokia வில் நமது பணிகளைச் செய்வதற்கான நமது தீர்ப்பை பாதிக்கும் என்று நியாயமான முறையில் கருதப்படுகின்ற அல்லது முறையற்ற தோற்றத்தை உருவாக்கக்கூடிய அனைத்து தனிப்பட்ட ஆர்வங்களையும் Nokia ஊழியர்கள் உடனடியாக வெளியிட வேண்டும்.

Nokia உடனான நமது கடமைகளில் தலையிடக்கூடிய அல்லது Nokia வின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயலையும் நாம் வேலையிலோ அல்லது வேலைக்கு வெளியேயோ செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை [**இங்கே**] காணலாம்.

நாம் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம்

எதில் கவனமாக இருக்க வேண்டும்

- Nokia வின் தற்போதைய அல்லது எதிர்கால வணிகத்தை பாதிக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய நிறுவனங்களின் நிதி அல்லது பிற ஆர்வங்கள் மற்றும் நிலைகள் மற்றும் அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய அவர்களுடைய வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் அல்லது வழங்குநர்கள்.
- பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் உங்களுடன் நெருங்கிய தனிப்பட்ட அல்லது குடும்ப உறவைக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அல்லது தனிப்பட்ட முறையில் நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ பயனடையக்கூடிய சூழ்நிலைகளில் எடுக்கப்படும் முடிவுகள்.
- குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பணியமர்த்தல் அல்லது நேரடியாக மேற்பார்வை செய்தல் அல்லது நீங்கள் அத்தகைய உறவைக் கொண்ட ஒருவரை ஊக்குவித்தல்.
- Nokia வணிக நேரங்களில் வெளிப்புற வேலைகளைச் செய்தல் அல்லது Nokia வள ஆதாரங்கள், அறிவுசார் சொத்துக்கள் அல்லது ரகசிய தகவல்களை Nokia விற்குத் தொடர்பற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துதல்.
- Nokia விடமிருந்து நிதி அல்லது ஆதரவை பெறும் அல்லது பெற விரும்பும் ஒரு தொண்டு அல்லது குடிமை அமைப்பின் அதிகாரி அல்லது இயக்குநராகப் பணியாற்றுபவர்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- ஒரு ஊழியரரிடம் தொழில்முறை அல்லது தனி-நலன் குறித்த போட்டி ஏற்படும் சூழ்நிலைகளில் கருத்து மோதல் எழுகிறது, இது வேலைவாய்ப்பு கடமைகளை பாரபட்சமின்றி நிறைவேற்றுவ-தை கடினமாக்குகிறது.
- முரண்பாடு இருப்பதன் தோற்றமே நற்பெயரு-க்குச் சேதம், நம்பிக்கை இழப்பு, மன உறுதி சேத-ப்படுதல் உள்ளிட்ட எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். உங்கள் செயல்கள் எவ்வாறு தோ-ற்றமளிக்கக்கூடும் என்பதைக் கருத்தில் கொ-ள்வதும், கருத்து வேறுபாடு பற்றிய உணர்வைத் தவிர்ப்பதும் முக்கியமாகும்.
- கருத்து வேறுபாடு என்பது ஒரு பிரச்சினை அல்ல, ஆனால் அது உடனடியாக வெளிப்படுத்தப்பட்டு ஒழுங்காக கையாளப்பட வேண்டும். உடனடி-யாக வெளிப்படுத்தப்படாத மற்றும் / அல்லது ஒழுங்காக கையாளப்படாத கருத்து வேறுபாடு Nokia உடனான உங்கள் நேர்மை மற்றும் விசுவாசத்தை மற்றவர்களுக்கு முன்னால் கேள்விக்குறியாக்கக்கூடும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

என் மாமா Nokia வின் முக்கிய வழங்குநர்க-ளில் ஒருவரிடம் மேற்பார்வையாளராகப் பணியாற்றுகிறார். எனது குழுவில் உள்ள மற்றவர்கள் இதுபோன்ற கொள்முதல் நடவ-டிக்கைகளுக்காக ஆலோசனைகளை வழ-ங்கினாலும் இந்த வழங்குநர் அல்லது அதன் போட்டியாளர்களுக்கு வணிகத்தை வழ-ங்குவதற்கான விருப்பத்தை Nokia வில் எனது பதவிநிலை எனக்கு வழங்குகிறது. இது கருத்து வேற்றுமையா?

ஆமாம். இந்த உறவைப் பற்றி உங்கள் மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும். இந்த வழங்குநர் அல்லது அவருடைய போட்டியாளர்கள் சம்பந்தப்பட்ட கொள்முதல் முடிவுகளில் நீங்கள் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம், இந்த விஷயத்தை எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றி நீங்களும் உங்கள் வரி மேலாளரும் கலந்தாலோசிக்க வேண்டும்.

அரசாங்க அதிகாரிக-ளைக் கை-யாளுவது

கொள்கை கண்ணோட்டம்

நோக்கியா சர்வதேச அமைப்புகள், அரசாங்கங்கள், அரசு அதிகாரிகள், அரசியல் கட்சிகளுடன் பின்வருவன உள்ளிட்ட பல்வேறு மட்டங்களில் பல்வேறு வழிகளில் ஈடுபடுகிறது:

- பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வணிகமாக;
- நமது நலன்களைப் பாதுகாக்க மனு அளிக்கும் அக்கறையுள்ள பெருநிறுவனக் குடிமகனாக;
- வரி செலுத்துபவராக;
- உலகெங்கிலும் பல நாடுகளில் ஒரு தனியார் துறை பங்கேற்பாளராக வேலைகள் மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குபவராக.

நோக்கியா அரசாங்க அதிகாரிகளுடனும் அரசியல்வாதிகளுடனும் ஒளிவுமறைவற்ற நேர்மையான உரையாடலுக்கு உறுதிபூண்டுள்ளது. அரசு அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளும்போது நாங்கள் நேர்மையாக, உண்மையாக, சரியானபடி தொடர்புகொள்வதுடன் நோக்கியாவின் கொள்கைகளையும் பொருந்தக்கூடிய சட்டங்களையும் பின்பற்றுகிறோம். அரசு வாடிக்கையாளர்கள் மற்றும் மாநில நிறுவனங்களுடனுமான எங்கள் தொடர்பாடல்களுக்கு கொள்முதல் தொடர்பான விதிகள், ஆதரவு திரட்டுதல், பொழுதுபோக்கு, விருந்தோம்பல், வெளிப்படுத்துகை மற்றும் பதிவு பேணல் உட்பட சிறப்புத் தேவைகள் பொருந்தும்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாம் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம்

கவனிக்க வேண்டியது என்ன:

- Nokia விடமிருந்து தகவல்களைக் கோரும் அரசு அதிகாரிகள்: சட்டத்தை அனுசரித்து அத்தகு தகவல்களுக்கான உரிமையை அதிகாரிகள் கொண்டுள்ளார்களா என்பதையும் அத்தகு தகவல்களை அளிக்கும் உரிமை நோக்கியாவுக்கு உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்தவும். பொருந்தும்போது, தொடர்புடைய நடைமுறையைப் பின்பற்றவும் அல்லது சட்டப்பூர்வ வழிகாட்டுதல் மற்றும் இணக்கத்தைப் பெறவும்.
- பொது கொள்முதல் விதிகள்: அத்தகைய விலகல் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்லது மன்னிப்பிற்குரியது என்று ஒரு அரசாங்க அதிகாரி கூறினாலும்கூட, அரசாங்கத்தின் பொது கொள்முதல் அல்லது டெண்டர் செயல்முறையிலிருந்து விலகிச் செயல்பட வேண்டாம்.
- ஓர் அரசு அதிகாரியை அல்லது அதிகாரியின் குடும்பத்தினரை, அவர் நோக்கியாவின் அரசாங்கத்துடனான வணிகத்தில் செல்வாக்கு செலுத்தும் பதவியில் இருக்கும்போது அவரை நோக்கியாவில் பணியமர்த்தும்போது விழிப்புடன் இருங்கள். இது நலன் முரண்பாடாகக் கருதப்படவும் சட்ட ஒழுங்குமுறை மீறலாகவும் இருக்கக்கூடும். அவர்கள் முன்பு பணியாற்றிய அமைப்புகளின் விதிகளுக்கும் நீங்கள் இணங்க வேண்டும்.
- பரிசு வழங்குதல் மற்றும் விருந்தளித்தல், உள்ளூர் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், மேலும் ஏற்படுத்தப்பட்ட Nokia வரம்புகள் மற்றும் கார்ப்பரேட் விருந்தோம்பலுக்கான ஒப்புதல் தேவைகள் உள்ளிட்ட பொருந்தக்கூடிய சட்டத்திற்கு இணங்காதபோது அரசாங்க அதிகாரிகளுக்கு பரிசு வழங்குதல் அல்லது விருந்தோம்பல் செய்தல்.
- ஒரு அரசாங்க அதிகாரியின் நடத்தை அல்லது முடிவை பாதிக்கும் ஒரு முயற்சியாகக் கருதப்படக்கூடிய அனைத்து செயல்பாடுகளும்

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- ஊழியர்கள், முகவர்கள் மற்றும் தேசிய, பிராந்திய, உள்ளூர் மற்றும் நகராட்சி அரசாங்கங்களின் பிற பிரதிநிதிகள் மட்டுமல்லாமல், அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களும், அவர்கள் சார்பாக செயல்படும் எவரும் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் அரசாங்க அதிகாரிகளில் அடங்குவர். நாடுகள் தங்கள் அரசாங்கக் கொள்கைகள், கட்டமைப்பு மற்றும் அதிகாரப்பூர்வ பதவிகளில் வேறுபடுவது குறித்து விழிப்புடன் இருங்கள்.
- நோக்கியா எந்த அரசியல் சார்பும் இன்றி உள்ளது. தனியார் நிறுவனங்கள் அல்லது கூட்டாளர்களைக் கையாளும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய விருந்தளிப்பது அல்லது சில டெண்டர் முன் விற்பனை நடவடிக்கைகளை வழங்குதல் போன்ற வணிக நடைமுறைகள், அரசாங்க வணிகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதவை அல்லது சட்டவிரோதமானவையாக இருக்கலாம்.
- அரசியல் குழுக்களுக்கு நேரடி நன்கொடைகள் மூலம் அரசியல் அல்லது தேர்தல் செயல்பாட்டில் பங்கேற்க Nokia வின் கொள்கை அனுமதிக்காது, ஆனால் Nokia தனது நலன்களை அரசாங்கங்களுடனும் சட்டம் இயற்றுவோருடனும் சட்டப்பூர்வமான மற்றும் வெளிப்படையான வழிமுறைகளில் பாதுகாத்துக் கொள்கிறது.
- உங்கள் தனிப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் உங்கள் சொந்த நேரத்தில் உங்கள் சொந்த வளங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். எந்த விதத்திலும் நோக்கியாவை ஈடுபடுத்தவோ அல்லது அப்படி கருதும்படி செய்யவோ கூடாது. தனிப்பட்ட அரசியல் நடவடிக்கைகளில் சட்டமியற்றலுக்கு ஆதரவளித்தல் அல்லது பரிந்துரைத்தல் அல்லது வேட்பாளர்களை ஆதரிப்பதும் நன்கொடையளிப்பதும்.
- நோக்கியா பணியாளர்கள் அரசு அதிகாரியுடன் வக்காலத்து நோக்கங்களுக்காக ஈடுபடத் திட்டமிடும்போது அவர்கள் நோக்கியாவின் கொள்கை மற்றும் அரசாங்க விவகாரங்கள் (PGA) குழுவைத் தொடர்புகொள்ள வேண்டும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்

தொலைத் தொடர்புத் துறை பெரிதும் கட்டுப்படுத்தப்படும் நாட்டில் Nokia தனது சந்தைப் பங்கை அதிகரிக்க முடியும் என்று நம்புகிறது. Nokia வின் நெட்வொர்க் கருவிகளைக் காண்பிப்பதற்காக பல முக்கியமான வாடிக்கையாளர்களுக்கும் ஒழுங்குமுறை நிறுவனத்தின் மூத்த உறுப்பினர்களுக்கும் வெளிநாட்டு பயணத்தை ஏற்பாடு செய்யுமாறு உங்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது ஏற்கத்தக்கதா?

அநேகமாக இல்லை. விருந்தினர் ஒரு அரசு அதிகாரி அல்லது அரசுக்கு சொந்தமான நிறுவனத்தில் அல்லது தனியார் நிறுவனத்தின் ஊழியரா என்பதைப் பொறுத்து பயணம், விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றை நிர்வகிக்கும் விதிகள் வேறுபடலாம். தனியார் நிறுவன ஊழியர்களுக்கு சில நிபந்தனைகளின் கீழ் வாடிக்கையாளர் பயணம் அனுமதிக்கப்படலாம், ஆனால் அரசாங்க அதிகாரிகள் மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பெரும்பாலும் வெவ்வேறு தரநிலைகள் பொருந்தும். இந்த சூழ்நிலையில் வழிகாட்டுதல்களைப் பெற சட்ட மற்றும் இணக்கக் குழுவின் உதவியைப் பெறுவது நல்லது.

நியாயமான போட்டி

கொள்கை கண்ணோட்டம்

கொள்கை கண்ணோட்டம் Nokia தீவிரமாக ஆனால் நியாயமாகப் போட்டியிடுகிறது.

பெரும்பாலான நாடுகளில் நுகர்வோர் மற்றும் சந்தை பங்கேற்பாளர்களின் நலனுக்காக நியாயமான போட்டியை உறுதி செய்வதற்காக சந்தையில் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போட்டி அல்லது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சட்டங்கள் உள்ளன.

இந்தச் சட்டங்கள் போட்டியாளர்களுக்கிடையே வணிக ஒத்திசைவு அல்லது பாதிக்கக்கூடிய தகவல் பரிமாற்றத்தைத் தடைசெய்கிறது. முறையான செயல்திட்டத்துக்கு கண்டிப்பாகத் தேவையானது மற்றும் சந்தையின் தாக்கம் வரம்புக்குட்பட்டது என்று இருந்தாலே அன்றி, இவை வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் அல்லது வர்த்தகக் கூட்டாளர்களுடன் தனிப்பட்ட அல்லது பிற வணிகத்தைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளைச் செய்வதைத் தடைசெய்கின்றன. சந்தையில் சக்திமிக்க நிறுவனங்களின் நியாயமற்ற நடத்தையை இவை தடைசெய்கின்றன.

நோக்கியாவின் வணிக யுக்திக்கு போட்டிச் சட்டங்களுக்கு இணங்குவது அத்தியாவசியமானது.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாம் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம்

கவனிக்க வேண்டியது என்ன

- நோக்கியா அதன் பிரதான போட்டியாளர்களைக் காட்டிலும் வேறு பல நிறுவனங்களுடனும் போட்டியிடுகிறது. வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் அல்லது வர்த்தகக் கூட்டாளர்களும் வேறு சந்தர்ப்பங்களில் போட்டியாளர்களாக இருக்கலாம்.
- முறைசாரா விவாதங்கள் அல்லது ஓர் உரையாடலில் செயலற்ற ஈடுபாடுகூட போட்டி விதிமீறலாகக் கருதப்படலாம். பிரச்சினைக்குரிய நடத்தையைக் கண்டால் உடனடியாக ஆட்சேபிக்கவும். நடத்தை தொடர்ந்தால், விவாதத்தை விட்டு வெளியேறுங்கள். உங்கள் ஆட்சேபனை அனைத்தும் பதிவுசெய்யப்படுவதை எப்போதும் உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- குறுகிய பிரிவுகள், பிரதேசங்கள் அல்லது கொடுக்கப்பட்ட வாடிக்கையாளர் வாய்ப்புகளுக்காக நோக்கியா வலுவான சந்தை நிலையை அனுபவிக்கலாம். அவ்வாறாயின், நோக்கியா அனைத்துத் தரப்பினருடனும் நேர்மையாக நடந்துகொள்ளும்.
- நியாயமற்ற நடத்தைகளாகத் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடிய வெளிப்பாடுகளைத் தவிர்க்க, பணியில் அல்லது தனிப்பட்ட சாதனங்களில் மின்னஞ்சல்கள் மற்றும் குறுஞ்செய்திகள் உட்பட அனைத்து ஆவணமாக்கல் மற்றும் செய்தித் தொடர்புகளில் மொழியைக் கவனமாகக் கையாளுங்கள்.
- போட்டியாளர்களுடனான எந்த சந்திப்புகளுக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலை உருவாக்கி விவாதமானது வணிக ஒத்திசைவு அல்லது போட்டி அளவுருக்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் தகவல் பகிர்வுக்குள் செல்லாமல் இருப்பதில் கவனம் செலுத்துங்கள்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- போட்டியாளர்களுடன் ஒத்திசைவது அல்லது எந்தவொரு போட்டி அளவுரு மீதும் பாதிப்பை ஏற்படுத்தும் தகவலைப் பகிர்வது சட்ட விரோதமானது (உ.ம்., விலைகள் மற்றும் பிற முக்கிய வணிக விதிமுறைகள், சிறிய நிதித் தகவல்கள் (அடக்கம் அல்லது இலாப சதவீதம் போன்றவை), இராசிய தயாரிப்பு விபரக்குறிப்புகள் அல்லது KPIகள், விற்பனை அளவுகள், தொடரும் சந்தை நடவடிக்கைகள் அல்லது வணிகத் திட்டங்கள், புத்தாக்கம் அல்லது தயாரிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், கொள்முதல் அல்லது வேலைவாய்ப்பு யுக்திகள் அல்லது விதிகள்)
- சந்தைகள், வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தப் புள்ளிகள் அல்லது போட்டியாளர்களின் பணியாளர்கள் இடையே பிளவை ஏற்படுத்துவது, மறுவிற்பனை விலைகளை ஆணையிடுவது, கூட்டு புறக்கணிப்புகளில் ஈடுபடுவது அல்லது துல்லியமற்ற அல்லது மிகைப்படுத்திய கூற்றுகளால் பிற நிறுவனங்களை இழிவுபடுத்துவது சட்டவிரோதமானது.
- சந்தையில் சக்திவாய்ந்த நிறுவனங்கள் தனிப்பட்ட பரிவர்த்தனைகள் அல்லது ஊக்கத்தொகைகள் தருவது உட்பட (உ.ம். பிரத்யேகத் தள்ளுபடிகள் அல்லது இறுதி வாய்ப்பு மீதான உரிமைகள்) நியாயமற்றுச் செயல்படுவதும் பிற கட்சிக்காரர்களை விலக்க அல்லது சுரண்ட முயற்சிப்பது, பாகுபாடு, சந்தைகளில் சுயவிருப்பம், நியாயமற்ற விலை (மிக அதிகம் அல்லது மிகக் குறைவு/அடக்கவிலைக்குக் கீழ் விலை), வலிந்து தயாரிப்பை இணைத்தல், நியாயமான விதிகளின்கீழ் அத்தியாவசிய உள்ளீடுகளை வழங்க மறுத்தல் அல்லது செயற்கையாக சந்தை நுழைவை அதிகரித்தல் அல்லது விரிவாக்கத் தடைகள் போன்றவை சட்டவிரோதமானது.
- வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் அல்லது கூட்டாளர்களுடன் பிரத்யேகமாக அல்லது பிற வணிகக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைச் செய்வது, ஏலக் கூட்டமைப்பு அல்லது பல ஏலம் கேட்பு, அத்துடன் போட்டியாளர்களுடன் சட்டப்பூர்வ ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கு நாது சட்டம் மற்றும் இணக்கக் குழுவுடன் ஆலோசிக்க வேண்டும்.

இந்தச் சூழ்நிலையைக் கவனியுங்கள்

நான் ஒரு போட்டியாளரின் சில ரகசிய விலை தகவல்களைப் பெற்றேன். நான் அதைக் கேட்கவில்லை, ஆனால் இந்த வகையான தகவல்கள் எனக்குப் பயனுள்ளதாக இருக்கும். நான் என்ன செய்ய வேண்டும்?

ஒரு போட்டியாளரிடமிருந்து பாதிப்பை ஏற்படுத்தும் போட்டிகரமான தகவல்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் பெற்றால் (உதாரணமாக ஒரு வர்த்தகச் சங்கத்தின் வாயிலாக), அதைப் பயன்படுத்துவதை, அழிப்பதைத் தவிர்த்து சட்டம் மற்றும் இணக்கத்தை ஆலோசிக்கவும். தகவலை அனுப்பியவருக்கும் அந்தத் தகவலைப் பெற நீங்கள் விரும்பவில்லை என்றும் நோக்கியாவின் போட்டிச் சட்ட இணக்கக் கொள்கைக்கு இணங்க அதை அழித்துவிட்டதாகவும் நீங்கள் பதிலளிக்க வேண்டும்.

முறையற்ற தொகை அளிப்புகள்

கொள்கை கண்ணோட்டம்

Nokia தனது வணிகத்தை தகுதியால் வெல்கிறது. ஒரு வாடிக்கையாளர், அரசாங்க அதிகாரி அல்லது மூன்றாம் தரப்பினருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செய்யப்படும் லஞ்சம் அல்லது கிக்பேக் உள்ளிட்ட முறையற்ற அல்லது ஊழல் கொடுப்பனவுகளை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்:

- முறையற்ற பரிசுகள்;
- பொழுதுபோக்கு, பணிக்கொடைகள், உதவிகள், நன்கொடைகள்;
- சாதகமான ஒப்பந்த விதிகள், வேலைக்குத் தேர்வுசெய்தல் அல்லது வழக்கமான நடைமுறைகளைப் புறக்கணித்தல் போன்ற சகாயங்கள்;
- மதிப்புமிக்க மற்ற எந்தவொரு பொருத்தமற்ற பரிமாற்றமும்

அதேபோல எளிதாக்கல் கொடுப்பனவுகளும் (சில நேரங்களில் "கிரீஸ் கொடுப்பனவுகள்" என்று குறிப்பிடப்படுகின்றன) தடைசெய்யப்பட்டுள்ளன. நேர்மைக்கான எங்கள் உறுதிப்பாட்டைப் பகிர்ந்து கொள்ளும் நற்பெயருள்ள மூன்றாம் தரப்பினருடன் மட்டுமே நாங்கள் ஈடுபடுகிறோம்.

அனைத்து பொருந்தக்கூடிய நிதி பதிவு பேணுகைக்கு இணங்கி நடக்கவும் தெரியப்படுத்தும் தேவைகள் மற்றும் அனைத்து பொருந்தக்கூடிய பண மோசடி எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் அதேபோல தீவிரவாத நிதியளிப்பைத் தடுப்பு மற்றும் வரி ஏய்ப்பு மோசடி ஆகியவற்றைத் தடுக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறைகளுக்கு இணங்கி நடக்கவும் நோக்கியா உறுதிகொண்டுள்ளது. முறையான மூலவளங்களிலிருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டு முறையாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் மூன்றாம் தரப்பினருடன் மட்டுமே நோக்கியா வணிகம் செய்கிறது.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாம் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம்

கவனிக்க வேண்டியது என்ன:

- அரசாங்க அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் அல்லது அவர்களுடைய குடும்பத்தினர் அல்லது நண்பர்களுக்காக அச்சாதரனமான, அதிகப்படியான, நடைமுறைக்குப் புறம்பான பயணம், விடுதிகளில் தங்குதல், விருந்தோம்பல் அல்லது வேறு எந்த நன்மைகளுக்கான கோரிக்கைகள்.
- அரசாங்க ஊழியர்களுககு அல்லது ஒரு வாடிக்கையாளருடன் இணைக்கப்படும் தொண்டு நிறுவனங்கள் அல்லது நிறுவனங்களுக்கு நன்கொடைகளைச் செய்வதற்கான கோரிக்கைகள்.
- சுங்கவரி, விசாக்கள், அல்லது குடியேற்றம் அல்லது வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரங்கள் மூலம் வழக்கத்திற்கு மாறாக "வேகமாக" அரசாங்க அனுமதிகளை வழங்குதல் ஆகியவற்றைப் பரிந்துரைக்கும் சேவை வழங்குநர்கள்.
- ஒரு பரிவர்த்தனையை துல்லியமற்ற அல்லது முழுமையற்ற முறையில் பதிவு செய்ய அல்லது நிதிக் கட்டுப்பாடுகளை சமரசம் செய்யும் வகையில் ஒப்புதல் அல்லது பணம் செலுத்துதலை விரைவுபடுத்துவதற்கான கோரிக்கைகள்.
- தவறான அல்லது ஊதிப்பெருக்கிய இன்வாய்ஸ்களை வழங்குநரிடமிருந்து பெற்று ஒப்புதலளிப்பது அல்லது நியாயப்படுத்த முடியாத ஆவணப்படுத்தப்படாத போட்டியான சலுகை வழங்குவது. இந்தச் சூழ்நிலைகள் கூடுதல் நிதியை உருவாக்கி அது கையூட்டுகள் அல்லது இலஞ்சத்துக்குப் பயன்படுத்த நேரிடும்.
- நாம் வணிகம் செய்யும் நிறுவனமாக இல்லாத ஒரு மூன்றாம் தரப்பினருக்கு, அல்லது அயல்நாட்டுக் கணக்கு வாயிலாகத் தொகை வழங்கக் கோரிக்கை.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- ஒரு முறையற்ற செலுத்துகை என்பதில் பொருந்தக்கூடிய சட்டங்களின்படி சட்டவிரோதமான அல்லது பெறுநரின் விதிகளின்படி அல்லது நோக்கியாவின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின்படி அனுமதிக்கப்படாத மதிப்புடைய எதையேனும் பெறுதல் அல்லது அனுப்புதல் அடங்கும் (இது ரொக்கமாக மட்டுமின்றி வேறுபிற பலன்கள், விருந்தோம்பல் அல்லது சேவை அல்லது மதிப்புள்ள விஷயங்களாக இருக்கலாம்).
- மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு வாடிக்கையாளரின் ஊழியர்களை அல்லது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஊழியர்களை உள்ளடக்கிய அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளும்போது விவேகத்தையும் எச்சரிக்கையையும் கடைப்பிடிக்கவும்.
- சுங்க அல்லது குடியேற்ற அனுமதி, அனுமதிப்பத்திரங்கள் அல்லது உரிமங்கள் அல்லது ஒப்புதல்களை வழங்குதல் போன்ற பணிக்கொடை அல்லது சேவையை விரைவுபடுத்த அரசு அதிகாரிக்கு தொகை அளித்தல் அல்லது கொடுப்பதற்கு ஒரு மூன்றாம் தரப்பினருக்கு அங்கீகாரம் அளிக்கவேண்டாம்.
- முறையற்ற தொகை அளிப்புகள் நோக்கியா மீதும் உங்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகிவிடும். எந்தவிதமான பணம் செலுத்துதல்களின் சட்டபூர்வமான தன்மை பற்றி உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால் எப்போதும் ஆலோசனையைப் பெறவும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

"ஒரு முக்கியமான வாடிக்கையாளர் கணக்கிற்கு நான் பொறுப்பு. திட்ட அமலாக்கத்தின் ஒரு பகுதியாக வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு துணை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய "ஒருமுறைக்" கட்டணத்தை உள்ளடக்கிய ஒரு புதிய கொள்முதல் ஆணையை அடுத்த நிலைக்கு அனுப்புமாறு வாடிக்கையாளர் என்னிடம் கேட்டுள்ளார். கட்டணம் எதைக் குறிக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, வாடிக்கையாளரிடம் கேட்டபோது, எனக்கு ஒரு தெளிவான பதில் கிடைக்கவில்லை. நான் எதை தெரிந்துகொள்ளவேண்டும்?"

"கட்டணம் மறைமுகமான கிக்பேக் அல்லது வேறு ஏதாவது முறையற்ற கட்டணமாக இருக்கும் ஆபத்து இங்கே உள்ளது. அசாதாரணமானதாகத் தோன்றும் மற்றும் முறையான பொருட்கள் அல்லது சேவைகளுடன் மீண்டும் இணைக்க முடியாத கொடுப்பனவுகளுக்கான எந்தவொரு கோரிக்கையும் ஆராயப்பட வேண்டும்; உங்களுக்கு இது பற்றிய கவலை இருந்தால், உங்கள் நேரடி மேலாளர், உங்கள் உள்ளூர் குறை தீர்க்கும் தலைவர் அல்லது சட்ட மற்றும் இணக்க குழு போன்ற யாராவது ஒருவரிடம் பேசுங்கள்."

வர்த்தக இணக்கம்

கொள்கை கண்ணோட்டம்

உலகெங்கிலும் உள்ள வன்பொருள், மென்பொருள், ஆவணங்கள், மூலக் குறியீடு, தொழில்நுட்பத் தரவு அல்லது பிற தொழில்நுட்பம் உள்ளிட்ட பொருட்களை வழங்குவது Nokia வின் செயல்பாடுகளை பல வழிகளில் பாதிக்கும் தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

எல்லைகள் தாண்டிய பொருட்களின் நேரடி அல்லது மின்னணு பரிமாற்றம் (காகித வடிவத்தில், மின்னஞ்சல் அல்லது இணையம் அல்லது பிற மின்னணு வழிகளில்) எல்லை தாண்டி பொருட்களை அனுப்புதல் அல்லது ஒரே நாட்டில் ஒன்றாக இருக்கக்கூடிய வெவ்வேறு நாட்டு மக்கள் தங்களுக்கிடையே தகவல்களை எழுத்துப்பூர்வமாக அல்லது வாய்வார்த்தையாகப் பரிமாறிக் கொள்வது, இந்தச் சட்ட வரம்புக்குள் வருவதுடன் கறாராக ஒழுங்குபடுத்தப்படக்கூடும்.

ஏற்றுமதி கட்டுப்பாடு, தடைகள், புறக்கணிப்பு எதிர்ப்பு, சுங்க இணக்கம் உள்ளிட்ட அதன் செயல்பாடுகளை பாதிக்கும் பொருந்தக்கூடிய அனைத்து வர்த்தக சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க Nokia உறுதிபூண்டுள்ளது. சர்வதேச வர்த்தகத்தை துல்லியமாகவும் வெளிப்படையாகவும் தயாரிக்கவும், செயல்படுத்தவும், வர்த்தக அதிகாரிகளுக்கு அறிக்கையிடவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

கவனிக்க வேண்டியது என்ன:

- கைமுறையாக சரக்கு அனுப்புதல் (நிறுவன ERP அமைப்புகளுக்கு வெளியே), வணிகப் பயணங்களில் எடுத்துச் செல்லும் பொருட்கள் மற்றும் ஏதேனும் மின்னஞ்சல், சேவையக அணுகல், வாய்மொழியாக அல்லது பிற வழிகளில் அனுப்பப்பட்ட ஏதேனும் கட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்.
- விலைப்பட்டியலை மீறிய அல்லது சந்தேகத்திற்கிடமான அல்லது அடையாளம் காணப்படாத சேவைகளுக்காக சுங்க தரகருக்கு அளிக்கப்பட கொடுப்பனவுகள்; விலைப்பட்டியல், சுங்க படிவங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றில் உள்ள எந்தவொரு தவறான விளக்கம், வகைப்பாடு, அல்லது பொருட்கள் அல்லது தரவுகளின் மதிப்பீடு.
- தடை செய்யப்பட்ட சேருமிடங்களுக்கு சரக்குகளை அனுப்பி பொருந்தக்கூடிய வர்த்தகச் சட்டங்கள் தவிர்க்க முயற்சிப்பதாக நாம் கருதும் நிறுவனங்கள் அல்லது நபர்கள்.
- வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்து நமது தயாரிப்புகளின் இறுதிப் பயன்பாடு, உண்மையான இறுதிப் பயனர், பட்டுவாடா தேதிகள் மற்றும் இருப்பிடங்கள் குறித்து தெளிவற்ற, குழப்பமான அல்லது அரைகுறை விடைகள்.
- தனிப்பட்ட ஏற்றுமதியை நிறுவன வளங்கள் அல்லது செயலாக்கங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடாது.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- அனைத்து நோக்கியா பணியாளர்களும் நிதிப் பரிவர்த்தனைகள், தொழில்நுட்ப பரிமாற்றங்கள், கட்டணமில்லா பரிவர்த்தனைகள், திருப்பங்கள் அல்லது கையில் எடுத்துச் செல்லும் பொருட்கள் உட்பட ஏதேனும் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு ஏற்பாடு செய்யும்போது பொருந்தக்கூடிய வர்த்தக விதிகளைப் பரிசீலித்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
- அனைத்து ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் சரியான ஆவணம், எந்த நாட்டிலிருந்து வருகிறது, கட்டண வீத வகைப்பாடு மற்றும் மதிப்புடன் துல்லியமாக அறிவிக்கப்பட வேண்டும். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆவணங்களை தணிக்கை நோக்கங்களுக்காக முறைப்படி காப்பகமிட வேண்டும்.
- ஏற்றுமதிகள் என்பது பௌதீகமாக சரக்குகளை அனுப்புவது மட்டுமில்லை, ஆனால் காகித வடிவில் தொழில்நுட்ப தகவல்களை விடுவித்தல், மின்னணு வழியில் அனுப்புதல் அல்லது மற்றவர்களுடன் வாய்வார்த்தைகளைப் பகிர்தல் ஆகியவையும் அடங்கும்.
- எல்லைதாண்டி கட்டுப்படுத்திய தகவல்களைக் கொண்டுள்ள மின்னணுச் சாதனங்களை எடுத்துச் செல்வது ஏற்றுமதியாகக் கருதப்படும். இதற்கு அனுமதி தேவைப்படலாம்; இது மின்னணுச் சாதனங்களில் வைத்துள்ள தகவல்களும் அடங்கும்.
- பல நாடுகள் குறிப்பிட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தரவுகளை அனுப்புவதில் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. சில நாடுகள் குறிப்பிட்ட பிற நாடுகளுடன் வணிகத்தை முற்றிலுமாகத் தடை செய்கின்றன. ஏற்றுமதி கட்டுப்பாடுகளும் தடைகளும் பொருந்தும்.

இந்தச் சூழ்நிலையைக் கவனியுங்கள்

நிறுவனத்துக்கு புதிய வாடிக்கையாளர்களைக் கண்டறியும் தேவை உள்ளது. முன்னாள் ரஷ்ய வாடிக்கையாளர் துருக்கிக்குக் குடிபெயர்ந்து அங்கே தனது செயல்பாடுகளை அமைத்துக்கொண்டுள்ளது தெரிய வருகிறது. இந்த வாடிக்கையாளர் கணிசமான அளவு ரேடியோ உபகரணத்தை வாங்க நோக்கியாவை அணுகுகிறார். இது ஓர் எளிய விற்பனையாகத் தோன்றுகிறது. காரணம் இந்த வாடிக்கையாளர் நிறுவலையோ அல்லது தொழில்நுட்ப ஆதரவுச் சேவைகளையோ கோரவில்லை. எனினும், ஆர்டர் செய்த உபகரணம் துருக்கியில் உள்ள அலைவரிசைகளில் செயல்படும்படி வடிவமைக்கப்படவில்லை. நோக்கியா இந்த வாய்ப்பைப் பயன்படுத்தலாமா?

இந்தப் பரிவர்த்தனையின் உண்மைகள் கேள்விகளை எழுப்புகிறது. மேற்கொண்டு நோக்கியா தொடரும்முன் இதைத் தீர்த்தாக வேண்டும். வழக்கமாக வழங்கப்படும் ஆதரவுச் சேவைகளை நிராகரிக்கும் வாடிக்கையாளர்கள் அல்லது வாடிக்கையாளரின் நாட்டில் முறையானதாக இல்லாத உபகரணத்தைக் கோருவது "அபாயச் சங்குகள்" ஆகும். இவற்றைத் தீர்க்கும் கடமை நோக்கியாவுக்கு உள்ளது. இந்த இடத்தில், மேற்கொண்டு தொடரும்முன் வர்த்தக மேலாண்மைக் குழுவை ஆலோசிக்க வேண்டும்.

மூன்றாம் தரப்புடன் பணிபுரிதல்

கொள்கை கண்ணோட்டம்

மூன்றாம் தரப்பினர் என்போரில் வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் வணிக மூன்றாம் தரப்பினர் உட்பட நோக்கியா உடன்படிக்கை செய்துக்ள்ளும் ஏதேனும் நபர், அமைப்பு அல்லது நிறுவனம் அடங்கும்.

நோக்கியா அதன் மூன்றாம் தரப்பினருடன் ஆக்கபூர்வமான, நெறிமுறையான மற்றும் வெளிப்படையான உறவுகளை நாடுகிறது. எங்களது அனைத்து மூன்றாம் தரப்பினரும் நோக்கியா தரத்தின்படி தகுதி பெறவும், பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றி சிறந்து செயல்படவும், எங்கள் நடத்தை விதிமுறைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மதிப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எங்கள் மூன்றாம் தரப்பினர் நோக்கியா மூன்றாம் தரப்பு நடத்தை இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது[3]. எங்கள் மூன்றாம் தரப்பினருக்கு பரிசு அல்லது விருந்தோம்பல் வழங்குதல், அல்லது அவர்களிடமிருந்து பரிசு அல்லது விருந்தோம்பல் ஆகியவற்றை ஏற்றுக்கொள்வது, பெருநிறுவன விருந்தோம்பலுக்கான பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் Nokia கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் மட்டுமே செய்யப்படுகிறது.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

3 https://www.nokia.com/about-us/investors/corporate-governance/code-of-conduct/

நாம் வணிகத்தைச் சரியான முறையில் செய்கிறோம்

கவனிக்க வேண்டியது என்ன:

- ஒரு வணிக பரிவர்த்தனை தொடர்பாக அத்தகைய மூன்றாம் தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கும்போது ஒரு குறிப்பிட்ட மூன்றாம் தரப்பினரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாடிக்கையாளர் அல்லது எதிர் தரப்பினரால் அழுத்தம் கொடுக்கப்படுகிறது.
- Nokia உடன் பணிபுரியத் தேர்வு செய்யப்பட மூன்றாம் தரப்பினர் பணம் அல்லது மதிப்புள்ள எதையும் வழங்குகிறார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சட்டபூர்வமான மற்றும் சாதாரண வணிக நடைமுறைகளிலிருந்து அசாதாரண விலகல்களை வழங்குகிறார்கள் (எ.கா. உங்கள் உறவினரை பணிக்கு அமர்த்துதல்).
- Nokia மதிப்புகள் மற்றும் கோட்பாடுகள், நடத்தை விதிமுறை மற்றும் / அல்லது Nokia வின் மூன்றாம் தரப்பு நடத்தை விதிமுறை ஆகியவற்றைப் பின்பற்றவும் ஏற்றுக்கொள்ளவும் மறுக்கும் மூன்றாம் தரப்பினர்.
- அரசாங்கம் அல்லது அரசு அதிகாரியால் அல்லது அரசு அதிகாரியின் நெருங்கிய குடும்ப உறுப்பினருக்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டில் உள்ள மூன்றாம் தரப்பினர், அல்லது அரசாங்கத்துடன் அல்லது ஒரு வாடிக்கையாளருடன் முறையற்ற செல்வாக்கை செலுத்த முடியும் என்று கூறும் ஒரு வழங்குநர்.
- சமீபத்தில் உருவான, குறைவான அனுபவமுள்ள அல்லது தேவையான பணியை மேற்கொள்ள போதிய அலுவலர் இல்லாத அல்லது வெளிப்படையான உடைமை உரிமை அமைப்புகள் இல்லாத மூன்றாம் தரப்பினர்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- கொள்முதல் கொள்கைகள், இணக்க பரிசோதனை ஆகியவற்றை நன்கு அறிந்திருங்கள். மேலும், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்கக்கூடிய, நெறிமுறை வணிக நடைமுறைகளுக்கான நமது உறுதிப்பாட்டைப் பகிர்ந்து கொள்ளும், மற்றும் நோக்கியா வின் பிராண்டு அல்லது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்காத மூன்றாம் தரப்பினரை மட்டுமே நாம் ஈடுபடுத்துகிறோம் என்பதை உறுதிப்படுத்த பணியமர்த்தும் தேவைகளை அறிந்துகொள்ளவும்.
- ஒரு குறிப்பிட்ட மூன்றாம் தரப்பினரைத் தேர்ந்தெடுக்கவோ அல்லது கையாளவோ மற்றும் / அல்லது அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு தேர்வு மற்றும் ஒப்பந்த செயல்முறையிலிருந்து விலகவோ உங்களிடம் கேட்கப்பட்டால் உடனடியாக ஒரு கருத்தை எழுப்புங்கள்.
- கேள்விக்குரிய அல்லது சட்டவிரோதமான வணிக நடைமுறைகளில் ஈடுபடும் மூன்றாம் தரப்பினருடனான வணிக உறவுகளை Nokia நிறுத்திவிடும்.
- பரிசுகள், பொழுதுபோக்கு மற்றும் விருந்தோம்பல் குறித்த Nokia வின் கொள்கைகளை அறிந்துகொண்டு புரிந்து கொள்ளுங்கள். கார்ப்பரேட் விருந்தோம்பல் மற்றும் பரிசுகள்தர நிலையான இயக்க நடைமுறைக்குள் Nokia வரம்புகள் மற்றும் ஒப்புதல் தேவைகளை மீறும் மதிப்புமிக்க எதையும் வழங்கும் மூன்றாம் தரப்பினரின் முயற்சிகளைப் புகாரளிக்கவும்.
- உங்கள் குடும்பத்தில் ஒருவர் அல்லது உங்களுடன் நெருங்கிய உறவிலுள்ள ஒருவர் முக்கிய பதவியில் அல்லது நோக்கியா மூன்றாம் தரப்பினருடன் உறவில் இருந்தால் அத்தகு நலன் முரண்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

நீங்கள் ஒரு முக்கியமான வாடிக்கையாளருடன் கணிசமான ஒப்பந்தத்தை கையெழுத்திடப் போகிறீர்கள். இந்த ஒப்பந்தத்திற்கு சில உள்ளூர் சேவைகள் தேவை, அதனால் Nokia ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் விற்பனையாளர்களை வேலைக்கமர்த்த வேண்டும். வேலையை விரைவாகச் செய்ய அவர்களுக்கு தேவையான "தொடர்புகள்" இருப்பதாகக் கூறி உள்ளூர் சேவைகளை மேற்பார்வையிட ஒரு சோதிக்கப்படாத மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரரை நியமிக்க வாடிக்கையாளர் உங்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார். அந்த நிறுவனத்தின் உண்மையான உரிமையாளர்கள் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. நீங்கள் இந்த ஒப்பந்தக்காரரைப் பணிக்கமர்த்துவது பாதுகாப்பானதா?

எச்சரிக்கையுடன் தொடரவும் மற்றும் சட்ட மற்றும் இணக்க குழுவுடன் கலந்தாலோசிக்கவும். Nokia இந்த மூன்றாம் தரப்பினருடன் வியாபாரம் செய்யக்கூடாது என்பதைக் குறிக்கும் பல சிவப்புக் கொடிகள் உள்ளன. ஒப்பந்தக்காரருக்கு ஒரு நிரூபிக்கப்பட்ட தட பதிவு இல்லை, வெளிப்படையற்ற உரிமையாளர்கள் வசம் உள்ளது, மற்றும் செலவுகளைக் குறைக்க அல்லது சட்டங்கள் அல்லது Nokia மதிப்புகளுக்கு மாறாக செயல்பட அதன் செல்வாக்கு அல்லது இணைப்புகளைப் பயன்படுத்தலாம்.

சுற்றுச்சூழல்

கொள்கை கண்ணோட்டம்

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் செயலூக்கமாகவும், வெளிப்படையாகவும் நன்னெறியுடனும் கையாள்வதற்குமான நோக்கியாவின் நீண்டகால அர்ப்பணிப்பு பெரும்பாலும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

மாசுபாடு மற்றும் வடிவமைப்பு, கொள்முதல், உற்பத்தி, பயன்பாடு மற்றும் வாழ்க்கையின் முடிவில் அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்கவும் தடுக்கவும் நோக்கியா தொடர்ந்து முயற்சிக்கிறது.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை எங்கள் வணிகப் பங்காளர்களும் வழங்குநர்களும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நமது மக்களையும் சமூகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- ஊழியர்கள், வழங்குநர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது பிற மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்படும் சுற்றுச்சூழல் புகார்கள் அல்லது கவலைகளை உடனடியாகத் தீர்க்கத் தவறுதல்.
- சிறந்த அல்லது நிலையான சுற்றுச்சூழல் நடைமுறைகளில் ஈடுபடாத வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள்.
- பொருந்தும் சுற்றுச்சூழல் விதிமுறைகள் அல்லது நிறுவனத்தின் வழிகாட்டுதல்களைப் புறக்கணித்தல்.
- எமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் சுற்றுச்சூழல் பாதிப்பை கழிவுப்பொருட்களை குறைத்தல், ஆற்றல் அல்லது பொருள் திறன் ஆகியவற்றை குறைப்பதன் மூலம், மாசுபாட்டைத் தடுக்கும் வாய்ப்பை இழத்தல்.
- சரியான நேரத்தில் Nokia வின் செயல்பாடுகளுக்குத் தேவையான அனைத்து சுற்றுச்சூழல் அனுமதிகள், உரிமங்கள் அல்லது பிற அனுமதிகளை (சுற்றுச்சூழல் தாக்க ஆய்வுகள் போன்றவை) பெறுதல், பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் நீட்டித்தல்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் சட்டப்பூர்வ தேவைகளை Nokia பூர்த்தி செய்கிறது அல்லது அதிகம் செயல்படுத்துகிறது. தனது ஊழியர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பிற வணிக பங்காளிகள் அனைவரும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து ஒரே மாதிரியான அல்லது சமமான தரங்களைப் பின்பற்ற வேண்டும் என்று Nokia எதிர்பார்க்கிறது.
- வடிவமைப்பு, கொள்முதல், உற்பத்தி, பயன்பாடு மற்றும் வாழ்நாள் முடிவு ஆகியவற்றில் Nokia தயாரிப்புகளின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதிலும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்கத் தொடர்ச்சியாகப் பணியாற்றுவதன் மூலம் - தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பயனர்களின் சுற்றுச்சூழல் கால்தடங்களைக் குறைக்க Nokia உதவுகிறது.
- உங்கள் பணி தொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் உங்கள் பணி செயல்பாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தயாரிப்பு தேவைகள் அல்லது தளவாடங்களில் போக்குவரத்து தேர்வு போன்ற குறிப்பிட்ட சுற்றுச்சூழல் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.
- Nokia வின் சுற்றுச்சூழல் நிர்வாகத்தில் சம்பவங்கள், தணிக்கைகள் மற்றும் பின்னூட்டங்கள் முன்னேற்றத்திற்கான பகுதிகளை முன்னிலைப்படுத்தும் சூழ்நிலைகளுக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்கவும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

“ஒரு புதிய தயாரிப்பை முடிவு செய்யும் ஒரு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழுவின் ஒரு பகுதியாக நான் இருக்கிறேன். தயாரிப்பின் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைத்து மதிப்பிடப்படுவதாகவோ அல்லது கவனிக்கப்படவில்லையோ என்று நான் கவலைப்படுகிறேன்; தயாரிப்பு வடிவமைப்பின் சில அம்சங்கள் எதிர்மறையான சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. நான் ஏதாவது செய்ய வேண்டுமா?”

“ஆமாம். Nokia சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முழுமையான அர்ப்பணிப்புடன் உள்ளது, மேலும் லாபத்திற்காக நமது கிரகத்தைச் சேதப்படுத்தும் விஷயத்தில் அது சமரசம் செய்யாது. சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றி முழுமையாகவும் சரியாகவும் மதிப்பிடப்பட்ட தயாரிப்புகளை மட்டுமே நாங்கள் உருவாக்குவோம். சரியான சுற்றுச்சூழல் செயல்முறைகளைத் தவிர்ப்பதற்கு ஆர் அன்ட் டி குழுவுக்கு அனுமதி கிடையாது. உங்கள் குறைகளை கருத்தில் கொள்ளப்படுவதை உறுதிசெய்யவும் மேலும் இந்த சுற்றுச்சூழல் அம்சம் கவனிக்கப்படவில்லை என்றாலும், அபிவிருத்தி திட்ட மேலாளர், உங்கள் நேரடி மேலாளர் அல்லது சட்ட மற்றும் இணக்கக் குழுவிடம் உங்கள் குறைகளை நீங்கள் எழுப்பலாம்.”

நியாயமான வேலைவாய்ப்பு



கொள்கை கண்ணோட்டம்

நேர்மையும் மரியாதையும் வெளிப்படையான, அச்சமற்ற மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நமது அத்தியாவசியங்களுடன் ஒருங்கிணைந்தவை.

சட்டப் பாதுகாப்பு உடையோர் போன்ற தனிப்பட்ட குணாம்சங்கள் எப்படியிருந்தாலும் ஒவ்வொருவரையும் நாங்கள் மதிக்கிறோம். இதில் வயது, மாற்றுத்திறன், பாலின அடையாளம், பாலினப் பண்புகள் அல்லது வெளிப்படுத்தும் விதம், இனம், மதம் அல்லது நம்பிக்கை, பாலினம், பாலின நோக்குநிலை ஆகியவை அடங்கும். நாங்கள் அவர்களின் திருமண அல்லது குடிமையியல் உறவுநிலை, கர்ப்பம் அல்லது குழந்தை வளர்ப்பு நிலையையும் மதிக்கிறோம்.

கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் பழிவாங்குதல் போன்றவை எந்த வடிவத்திலும் தடைசெய்யப்பட்டுள்ளது."

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நமது மக்களையும் சமூகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்

கவனிக்க வேண்டியது என்ன:

- துன்புறுத்தல், முறையற்ற அல்லது தேவையற்ற நடத்தை, பாலியல் இயல்புடையதாக இருக்கலாம் அல்லது பாதுகாக்கப்பட்ட தன்மையுடன் தொடர்புடையதாக இருக்கலாம். இது மற்றொரு நபரின் கண்ணியத்தை மீறும் அல்லது அச்சுறுத்தும், விரோதமான, இழிவுபடுத்தும், அவமானகரமான அல்லது புண்படுத்தும் வகையிலான அல்லது மோசமான நடத்தப்படுதல் போன்ற பாதுகாக்கப்பட்ட தனிநபர் பண்புகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, துன்புறுத்தலில் தேவையற்ற மற்றும் பொருத்தமற்ற கருத்துகள், நகைச்சுவைகள் அல்லது தொடுதல் ஆகியவை அடங்கும். துன்புறுத்தல் என்பது பணியிடத்திற்கு உள்ளே அல்லது வெளியே ஒரு முறை அல்லது மீண்டும் மீண்டும் நிகழும் நிகழ்வாக இருக்கலாம்.
- கொடுமைப்படுத்துதல் என்பதில் அச்சுறுத்தும், புண்படுத்தும், தீங்கிழைக்கும் அல்லது அவமதிக்கும், அல்லது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் தேவையற்ற நடத்தை போன்றவை அடங்கும். கொடுமைப்படுத்துதல் என்பது ஒரு முறை சம்பவமாக இருக்கலாம் அல்லது பணியிடத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ, நேரிலோ அல்லது மெய்நிகராகவோ நிகழும் வழக்கமான நடத்தை முறை, உடல் அல்லது வாய்மொழியாக, வெளிப்படையாக அல்லது நுட்பமாக, வேண்டுமென்றே அல்லது தற்செயலாக நடப்பதாக இருக்கலாம்.
- துன்புறுத்தும் வகையிலான நுண்ணிய நடத்தைகளான கருத்துகள், கேள்விகள் போன்றவற்றை வேண்டுமென்றே செய்தாலும் தெரியாமல் செய்தாலும் அவை பொருத்தமற்றவை தான், அது மற்றவர்கள இழிவுப்படுத்துவதாகவும் எதிர்மறையாகவும் கருதப்படும். வேலைகளில் இருந்து மக்களை விலக்குவது, சக ஊழியர்களின் பணிகளில் தொடர்ந்து குறுக்கிடுவது, மற்றவர்களின் பணிக்கான பாராட்டை அபகரித்துக் கொள்வது, மற்றவர்களின்பணி ஓய்வு நேரத்தைமீண்டும் மீண்டும் புறக்கணிப்பது அல்லது மற்ற வகைகளில் மோசமாக நடத்துவது போன்றவை அது பாதுகாக்கப்பட்ட பண்புகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் துன்புறுத்தும் வகையிலான நுண்ணிய நடத்தைகளில் அடங்கும்.
- ஒருவரின் வேலைவாய்ப்பு தொடர்பான தகுதி, சம வாய்ப்புக் கொள்கைகள் அல்லது பிற முறையான வணிகக் காரணங்களுக்காக எடுக்கப்படாத எந்த முடிவுகளும் இதில் அடங்கும்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

- நாங்கள் வணிகம் செய்யும் எல்லா இடங்களிலும் நெறிமுறை, உள்ளடக்கிய, உளவியல் ரீதியாக பாதுகாப்பான பணிச்சூழலைப் பராமரிக்க நோக்கியா முயற்சிக்கிறது. பணியிடத்தில் சட்டவிரோதப் பாகுபாடு, பகைமை, தரக்குறைவு நடத்தை, பழிவாங்கல் அல்லது புண்படுத்தும் நடத்தையை நாங்கள் சகித்துக்கொள்வதில்லை.
- எங்கள் பணியாளர்கள் அனைவரும், அவர்களின் பதவி அல்லது பணிமூப்பைப் பொருட்படுத்தாமல், Nokia இன் அத்தியாவசியமான அடிப்படைகளான வெளிப்படைத்தன்மை, அச்சமற்ற தன்மை மற்றும் அதிகாரமளித்தல் போன்ற கொள்கைகள் மூலம் வழிநடத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அர்த்தம் மற்றவர்களை நாங்கள் எல்லா நேரத்திலும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நாகரீகமாகவும் நடத்துகிறோம். தகவல் தொடர்புகள் மற்றும் பிற தொடர்பாடல்கள், அவை நேருக்கு நேர் என்றாலும் அல்லது மின்னணு முறை, வாய்மொழி அல்லது வாய்மொழி அல்லாததாக இருந்தாலும் அதில் மற்றவர்கள் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும்.
- அனைத்துப் பணியாளர்களுக்கும் நோக்கியா சம வாய்ப்புகளை வழங்குகிறது. சட்டப் பாதுகாப்புடையவர்கள் உட்பட ஒருவரின் குணாதிசயம் எப்படியிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அனைத்து வேலைவாய்ப்பு முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. இதில் வயது, மாற்றுத்திறன், பாலின அடையாளம், பாலினப் பண்புகள் அல்லது வெளிப்படுத்தும் விதம், இனம், மதம் அல்லது நம்பிக்கை, பாலினம், பாலின நோக்குநிலை ஆகியவை அடங்கும். நாங்கள் அவர்களின் திருமண அல்லது குடிமையியல் உறவுநிலை, கர்ப்பம் அல்லது குழந்தை வளர்ப்பு நிலையையும் மதிக்கிறோம்.
- எங்கள் அதிகாரிகள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் வணிகப் பங்காளிகள் உட்பட அனைவரும் தவறான அல்லது பாரபட்சமான நடத்தைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று Nokia எதிர்பார்க்கிறது, மேலும் பழிவாங்கப்படுவோம் என்ற பயம் இல்லாமல் உண்மையான பிரச்சினைகளை தெரிவிக்க அனைவரும் அதிகாரம் பெற வேண்டும் என்று விரும்புகிறது.
- Nokia அனைவரையும் "நட்பாக" இருக்க ஊக்குவிக்கிறது, அனைவரையும் உள்ளடக்குவதை ஆதரிக்கிறது மற்றும் விலக்கப்பட்டவர்களுக்காக பேசுகிறது. கூட்டாண்மை என்பது நீங்கள் அவதூறான நடத்தை அல்லது பாகுபாடுகளைக் கண்டால் அதற்கு அழைப்பு விடுப்பது உட்பட நீங்கள் ஒரு பகுதியாக இல்லாத குழுக்களுடன் செயலூக்கத்துடன் தொடர்ச்சியாகவும் ஒற்றுமையுடனும் செயல்படுவதை உள்ளடக்குகிறது.

இந்தச் சூழ்நிலையைக் கவனியுங்கள்

"நீங்கள் ஒரு குழு காணொளி சந்திப்பில் இருக்கிறீர்கள். அப்போது உங்கள் மேலாளர் ஒரு குழு உறுப்பினரை, அவரது பாலியல் நோக்குநிலை காரணமாக பரிகசிப்பதைக் கவனிக்கிறீர்கள். முந்தைய நாள் இரவு அதே பாலின கூட்டாளியுடன் இரவுணவுக்குச் செல்கையில் அந்தக் குழு உறுப்பினர் தனது பாலியல் நோக்குநிலையைக் குறிப்பிட்டிருந்தார். மேலும் மேலாளர் டீம்ஸ் சாட்டில் அதைப்பற்றி கேவலமான நகைச்சுவைகளை பதிவிடுகிறார். அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர் அதைப் பற்றி மிகவும் வருத்தப்படுவதாக உங்களிடம் தெரிவிக்கிறார், ஆனால் அதைப் பற்றி வெளிப்படையாகப் பேசினால் தாங்கள் மேலும் அவமானப்படுத்தப்படுவோம் என்று பயப்படுகிறார்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"இந்த மாதிரியான கருத்துகள் மற்றும் நடத்தை Nokia கொள்கைக்கு எதிரானது மற்றும் பொறுத்துக் கொள்ளப்படாது. தொடர்புடைய நபருடன் நட்பாகச் செயல்படுங்கள், மக்கள் அமைப்பு, உங்கள் மேலாளர், சட்டம் மற்றும் இணக்கம், குறைதீர்ப்புத் தலைவர் ஆகியோருடன் பேசுங்கள் அல்லது நெறிமுறைகள் உதவி மையத்தில் உங்கள் பிரச்சினையைத் தெரிவியுங்கள். அவ்வாறு பகாரளித்ததற்காக நீங்கள் எந்த பழிவாங்கலையும் சந்திக்க மாட்டீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்."

உடல்நலம், பாது-காப்பு மற்றும் தொழிலாளர் நிலைமைகள்

கொள்கை கண்ணோட்டம்

Nokia விற்காக அல்லது அதன் சார்பாக வேலை செய்யும் எல்லோரும் நாள் முடிவில் பாதுகாப்பாக வீட்டிற்கு செல்வதை உறுதி செய்வதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

ஒரு பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நியாயமான பணிச்சூழலை வழங்குவதன் மூலம் பரஸ்பர, எங்கள் ஒப்பந்தக்காரர்கள், எங்கள் கூட்டாளர்கள், எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பொது உறுப்பினர்களின் மரியாதையை நாங்கள் பெறுகிறோம்.

பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை தேவைகளை பூர்த்தி செய்யும் அல்லது மீறும் எங்கள் உள்ளகச் செயல்முறைகளின் வலுவான மற்றும் சீரான செயலாக்கத்தின் மூலம் நாங்கள் இதைச் செய்கிறோம். எங்கள் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களிடமும் நாங்கள் இதையே எதிர்பார்க்கிறோம்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நமது மக்களையும் சமூகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- ஒரு டாக்ஸியில் ஒரு பாதுகாப்பு பெல்ட்டை அணிந்துகொள்ளாத சக ஊழியர்கள், வாகனம் ஓட்டும்போது கூட்டு அழைப்பில் கலந்துகொள்வது அல்லது இடங்களில் சரியான பாதுகாப்புகள் இல்லாமல் செங்குத்தான உயரத்தில் வேலை செய்வது போன்ற ஆபத்தான சூழ்நிலைகள்.
- எங்கள் கொள்கைகள் அல்லது சட்டத் தேவைகளைப் புறக்கணிக்கும் அல்லது மற்றவர்களை ஆபத்தில் ஆழ்த்தும் வகையில் செயல்படும் மேலாளர் வேலை செய்யும்படி கோரும் வேலைக்கு லாயக்கில்லாத எவரும்.
- அதிக வேலைச்சுமையின் காரணமாக வேலையில் சிரமப்படுவதாகத் தோன்றும் அல்லது வேலையைச் சமாளிக்க முடியாத சக ஊழியர்கள், நிறுவனநிலை மாற்றத்தைப் பற்றி கவலைப்படுபவர்கள், அல்லது பங்களிக்கும் வேலைக்கு வெளியே அதிகப்படியான உணர்வினால் அழுத்தத்தை உள்ளவர்கள் மற்றும் ஆதரவு தேவைப்படுபவர்கள்.
- உங்கள் அன்றாட வேலை நடைமுறைகளில் உள்ள வாய்ப்புகள், வேலையில் ஒரு நல்ல நாளுக்குப்பிறகு அனைவரும் பாதுகாப்பாக வீட்டிற்குச் செல்வதற்கான வாய்ப்பை அதிகரிக்கும்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை எங்கள் வணிகம் மற்றும் செயல்முறைகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது; எங்கள் தயாரிப்புகள் மற்றும் அமைப்புகளின் வடிவமைப்பு, உற்பத்தி, விநியோகம், நிறுவல் மற்றும் ஆதரவு ஆகியவையும் இதில் அடங்கும்.
- வலுவான, சீரான மற்றும் வெளிப்படையான இடர் பா-துகாப்பு மேலாண்மை மூலம் எங்கள் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு செயல்திறனை நாங்கள் தொடர்ந்து மேம்படுத்துகிறோம், வேலை தொடர்பான விபத்துகளைத் தடுக்க தொடர்ந்து கற்றுக் கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் முயல்கிறோம், மேலும் புதிய பணி நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துகிறோம் (சாத்தியமான இடங்களில்).
- பணியில் எல்லோருடைய நாளும் ஒரு நல்ல நாளாக இருக்க வேண்டும், மேலும் எல்லோரும் உயர் செயல்திறன் மற்றும் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான இல்வாழ்க்கைக்கு இடையே ஒரு உகந்த சமநிலையை அடைய வேண்டுமென்று விரும்புகிறோம்.
- சம்பவங்கள், தணிக்கைகள் மற்றும் பின்னூட்டங்கள் சுட்டிக்காட்டும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காணும் சூழ்நிலைகளை சரிசெய்ய உடனடி நடவடிக்கை எடுக்கிறோம், மேலும் நிலையான, அளவிடக்கூடிய மற்றும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய தீர்வுகளை உருவாக்குகிறோம்.
- எங்கள் வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பிற வணிகப் பங்காளிகள் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நிலைமைகளுக்கு சமமாக அதிக முன்னுரிமை அளிப்பார்கள் என்றும் அவர்களின் செயல்பாடுகளில் ஒரே தரத்தை நிலை நாட்டுவார்கள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

ஒரு திட்ட மேலாளராக, பல்வேறு தளங்க-ளில் நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க எனது வாடிக்கையாளரிடமிருந்து கடும் அழுத்தத்திற்கு உள்ளாகிறேன். நாங்கள் விரைவாக வேலைகளைச் செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை எங்கள் பொறியியல் குழுக்களுக்கு நான் விளக்கியிருக்கிறேன் - வாடிக்கையாளரிடமிருந்து நாங்கள் எதிர்கால ஒப்பந்தங்களைப் பெறுகிறோமா என்பதை பெரும்பாலும் இதுவே தீர்மானிக்கும். நான் அவர்களை நீண்ட நேரம் மற்றும் வார இறுதி நாட்களிலும் வேலை செய்யும்படி கூறினேன். இது ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு இருக்கும் என்று நான் எதிர்பார்த்திருந்தாலும், இப்போது அது ஒரு மாதத்திற்கும் மேலாக நடந்து வருகிறது. இந்த நடைமுறை சரியா?

Nokia நன்னடத்தை கோட்பாடுகளுக்கு வெளியே நீங்கள் செயல்பட்டிருக்கலாம், ஏனெனில் உங்கள் செயல்கள் பொறியியலாளர்களை ஆபத்தில் ஆழ்த்தி, அவர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை பாதிக்கும். சோர்வு, ஆயாசம் அல்லது பிற காரணிகளால் அவர்கள் தவறுகளைச் செய்யலாம், மேலும் அந்த தவறுகள் கடுமையான உடல்நலம் மற்றும் பாதுகாப்பு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். வாடிக்கையாளருடன் திட்ட நீட்டிப்பு குறித்தபேச்சுவார்த்தைகளை நடத்துதல் அல்லது கூடுதல் ஆதாரங்களைக் கொண்டு வருவது போன்ற மாற்று வழிகளை நீங்கள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மனித உரி-மைகள்

கொள்கை கண்ணோட்டம்

"கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம், தனியுரிமை, தகவல் அணுகல், கருத்துப் பரிமாற்றம் மற்றும் பொருளாதார மேம்பாடு போன்ற அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு நேரடியாகத் தொடர்புகொள்வதற்கும் பங்களிப்பதற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்தும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை Nokia வழங்குகிறது. எவ்வாறாயினும், தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் மற்றும் ஒரு தகவல் தொடர்பு தொழில்நுட்ப வழங்குநராக எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது.

Nokia உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் வணிகம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டுதல் கோட்பாடுகளின் கொள்கைகளைப் பின்பற்றுகிறது, மேலும் எங்கள் சப்ளையர்கள் மற்றும் வணிகப் பங்காளிகள் இந்த விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்."

நமது தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் பொருட்கள் சமூகப் பொறுப்புணர்வு மூலங்களிலிருந்து வருகின்றன என்பதை உறுதிப்படுத்த Nokia எதிர்பார்க்கிறது. முரண்பாட்டைத் தூண்டும் அல்லது மனித உரிமைகளை மீறும் எவ்வித நடவடிக்கையையும் நாம் பொறுத்துக் கொள்ளவோ, அதற்குப் பங்களிக்கவோ அல்லது உதவவோ மாட்டோம். எந்தவொரு சூழலிலும், நாங்கள் செயல்படும் எந்தவொரு பிராந்தியத்திலும் அல்லது நமது உலகளாவிய விநியோகச் சங்கிலியின் எந்தப் பகுதியிலும் எங்கள் நடவடிக்கைகளில் அடிமைவேலை, குழந்தைத் தொழிலாளர்கள், கட்டாய உழைப்பு, மனித கடத்தல் அல்லது அடிமைத்தனத்தை Nokia எந்தச் சூழ்நிலையிலும் பொறுத்துக்கொள்ளாது.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நமது மக்களையும் சமூகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- சட்டத்தின் ஆட்சி பலவீனமாக உள்ள நாடுகளில் அல்லது அரசாங்கம் சுதந்திரமான மற்றும் திறந்த ஜனநாயக செயல்முறைகளின் விளைவாக இல்லாத நாடுகளில் வணிகத்தை நடத்துதல்.
- Nokia நெட்வொர்க்கை நிர்வகிக்கும் சந்தர்ப்பங்களில் வணிகத்தின் சாதாரண போக்கில் வழங்கப்படுவதைவிடக் கூடுதலான சந்தாதாரர் தரவிற்கான கோரிக்கைகள்.
- தரநிலையான செயல்பாடுகளுக்குக் கூடுதலாக, இருப்பிட அடிப்படையிலான தரவு அல்லது போக்குவரத்து அல்லது நிகழ்வுகள் குறித்த விரிவான சந்தாதாரர் தரவு போன்ற குறிப்பிட்ட அம்சங்களுக்கு அதிக ஆபத்துள்ள நாடுகளில் இருக்கும் ஆபரேட்டர்களிடமிருந்து கோரிக்கைகள்.
- வயது குறைந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது பாதுகாப்பான அல்லது ஆரோக்கியமான பணியிடங்களை வழங்கத் தவறிய அல்லது கொடுக்கப்படும் ஊதியம் பற்றிய பதிவுகள் உட்பட கோரிக்கையின் பேரில் போதுமான வேலைவாய்ப்பு ஆவணங்களை வழங்கத் தவறிய வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள்.
- சர்வதேச அமைப்புகளால் கட்டுப்படுத்தப்படும் முரண்பாடுள்ள நாடுகளிலிருந்து கனிமங்களின் பயன்பாடு.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- Nokia தெளிவான தரநிலைகளின் அடிப்படையில் மற்றும் சட்டத்தில் வெளிப்படையான அடித்தளத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட, முக்கிய "சட்டபூர்வமான இடைமறிப்பு" திறன்களை வழங்குகிறது. பெரும்பாலான நாடுகளில் செயல்படுவதற்கான உரிமத்தின் ஒரு பகுதியாக, அத்தகைய திறன்களை வழங்குவதற்கும், முறையான சட்ட அமலாக்கத்தில் அதிகாரிகளுக்கு உதவுவதற்கும் ஆபரேட்டர்கள் தேவை.
- Nokia ஆனது விற்பனைக்கு முன்கூட்டியே விடாமுயற்சியுடன் நடத்துகிறது, மேலும் மனித உரிமைகளை மீறுவதும், மீறாமல் இருப்பதும், எங்கள் தயாரிப்புகள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த சர்வதேச தரத்திற்குப் பின்தொடர்கின்றன.
- Nokiaவின் மனித உரிமைகள் தொடர்பான உறுதிப்பாட்டைப் பகிர்ந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்காக அதன் வழங்குநர்கள் மற்றும் வர்த்தக கூட்டாளர்களிடமிருந்து Nokia விடாமுயற்சியாகச் செயல்படுகிறது.
- Nokia ஆனது பொருந்தும் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகளை ஆதரிக்க மற்றும் நமது தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் முரண்பாட்டுக்குப் பங்களிக்க முடியாது என்று சரிபார்க்க தொழில் முயற்சிகளில் பங்கேற்கிறது.
- Nokia இயற்கை வளங்களைச் சட்டவிரோதமாக அல்லது தவறாகப் பயன்படுத்துவதில்லை அல்லது சுரண்டுவதில்லை. Nokia எங்கள் தயாரிப்புகளில் உள்ள உலோகங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை சப்ளை சங்கிலி மூலம் மீண்டும் ஸ்மெல்ட்டர்கள் வரை தடமறிந்து கண்காணிக்கிறது.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

"எங்கள் வழங்குநர்களில் ஒருவர் 'பாதுகாப்பிற்காக' ஊழியர்களின் பாஸ்போர்ட்களை தன்னிடத்தில் வைத்துக்கொண்டுள்ளார் என்றும், மேலும் அவர்களின் ஊதியங்களும் முதலாளியால் கட்டுப்படுத்தப்படும் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளது என்றும் நான் கேள்விப்பட்டேன். இது ஒரு கவலையா?"

"ஆமாம். இந்த சிக்கலைப் பற்றி சட்ட மற்றும் இணக்கக் குழுவிடம் அல்லது அறிக்கை சேனல்களில் ஒன்றின் மூலம் புகாரளிப்பது உங்கள் கடமையாகும். பயண ஆவணங்களைத் தக்கவைத்து, ஊழியர்கள் மீது ஏற்றுக்கொள்ள முடியாத பிற கட்டுப்பாடுகளை விதிக்கும் முதலாளிகள் நவீன அடிமைத்தனக் குற்றங்களைச் செய்யலாம். இதை நிறுவனத்திடம் புகாரளிப்பது ஒரு கடமையாகும் .

தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்பு

கொள்கை கண்ணோட்டம்

நாங்கள் தனியுரிமையை மதிக்கிறோம். தனிநபர்களாகிய நம் அனைவருக்கும் தனியுரிமை முக்கியமானது. தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதில் Nokia தன்னைத் தானே மிக உயர்ந்த தரத்தில் வைத்திருப்பதும் அவசியம். எங்கள் வணிகம் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. தனியுரிமையை மதிப்பது மற்றும் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பது என்பது சட்டங்களுக்கு இணங்குவதற்காக மட்டுமல்ல; ஒரு நம்பகமான மற்றும் நெறிமுறை நிறுவனமாக நோக்கியாவிற்கு இது ஒரு அடிப்படை விழுமியமாகவும் இருக்கிறது.

Nokia தனிப்பட்ட மற்றும் வாடிக்கையாளர் தரவைப் பொறுப்புடனும், சட்டபூர்வமாகவும், கவனமாகவும் சேகரிக்கிறது, பயன்படுத்துகிறது, வைத்திருக்கிறது மற்றும் செயலாக்குகிறது. தனிப்பட்ட தரவை நேர்மையாகவும், நெறிமுறையாகவும், தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்கவும் செயலாக்குகிறோம். எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வடிவமைப்பில் தனியுரிமை மற்றும் பாதுகாப்பை நாங்கள் உருவாக்குகிறோம், மேலும் தனிப்பட்ட தரவை ரகசியமாக வைத்திருக்கும் போது அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது வெளிப்படுத்தலுக்கு எதிராகப் பாதுகாக்கப் பொருத்தமான பாதுகாப்புகளைப் பயன்படுத்துகிறோம். இத்தகைய பாதுகாப்புகள் செயலாக்க நடவடிக்கைகள் மற்றும் தனிப்பட்ட தரவின் தன்மை ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்களுக்கு பொருத்தமான பாதுகாப்பின் அளவை உறுதி செய்கின்றன.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நமது மக்களையும் சமூகத்தையும் நாங்கள் மதிக்கிறோம்

எதை கவனிக்க வேண்டும்

- தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு அணுகுகிறோம், சேகரிக்கிறோம் மற்றும் கையாளுகிறோம் என்பது குறித்து எங்கள் வாடிக்கையாளர் ஒப்பந்தங்களில் வரையறுக்கப்பட்டுள்ள தேவைகளை எப்போதும் பின்பற்றவும். எங்கள் வாடிக்கையாளர் பொறுப்புகள் அல்லது எங்கள் உள் தனியுரிமைக் கொள்கைகளுடன் பொருந்தாத வகையில் தனிப்பட்ட தரவைச் சேகரிக்கவோ, செயலாக்கவோ சேமிக்கவோ கூடாது.
- தனிப்பட்ட தரவைச் சேமிக்கும்போது, அது பாதுகாக்கப்பட்ட சூழலில் இருப்பதை உறுதிசெய்யவும். பிரின்டர், பகிரப்பட்ட சர்வர் அல்லது பொதுவில் அணுகக்கூடிய கணினி அல்லது இணையதளத்தில் தனிப்பட்ட தரவை விடாதீர்கள்.
- தனிப்பட்ட தரவு சேகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக தேவையில்லை என்றால், அது நீக்கப்பட வேண்டும், அழிக்கப்பட வேண்டும் அல்லது அநாமதேயமாக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட தரவை அணுகுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மட்டுமே அதை வெளிப்படுத்தவும்.
- வாடிக்கையாளர், வழங்குநர் அல்லது வேறு எந்த நபரிடமிருந்தும் தனியுரிமை தொடர்பான கோரிக்கையை நீங்கள் பெற்றால், கோரிக்கையை **privacy@nokia.com** க்கு அனுப்புவதை உறுதிசெய்யவும்.
- அனைத்து ஊழியர்களுக்கும் தனிப்பட்ட தரவுகளை இரகசியமாகப் பாதுகாக்கும் கடமை இருக்கிறது.
- தனிப்பட்ட தரவை மீறுவதாக நீங்கள் சந்தேகித்தால், அதைப்பற்றி உடனடியாக உங்கள் லைன் மேனேஜர் அல்லது தகவல் பாதுகாப்புக் குழுவிடம் புகாரளிக்க வேண்டும் அல்லது அதை சரியாக கையாண்டு சாத்தியமான தீங்குகளைத் தணிப்பதற்காக **security@nokia.com** க்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

- தனிப்பட்ட தரவு என்பது ஒரு நபரை அடையாளம் காணக்கூடிய எந்தவொரு தரவையும் குறிக்கிறது. தொடர்பு விவரங்கள், தனிப்பட்ட சுயவிவரங்கள் அல்லது ஒரு நபரின் குரல், படம் மற்றும் இருப்பிடம் போன்ற நேரடி வணிகம் மற்றும் மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் இதில் அடங்கும். தேசிய பாதுகாப்பு எண், IP முகவரி, சாதனம் அல்லது செயலி அடையாளங்காட்டி போன்ற மறைமுகத் தகவல்களும் இதில் அடங்கும். சந்தேகம் இருந்தால், நீங்கள் ஒரு தகவலை தனிப்பட்ட தரவாகக் கருத வேண்டும்.
- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைப் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான தனிப்பட்ட தரவை மட்டும் அணுகவும் பயன்படுத்தவும் வேண்டும்.
- எங்கள் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்களின் எந்தவொரு தனிப்பட்ட தரவும் நியாயமானதாகவும், சட்டப்பூர்வமான அடிப்படையில் (ஒப்புதல், ஒப்பந்தம், முறையான விருப்பம் போன்றவை) சேகரிக்கப்பட வேண்டும்.
- சேகரிக்கப்பட்ட தரவு குறிப்பிட்டதாகவும், பொருத்தமானதாகவும், போதுமானதாகவும், அது சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் முறையான நோக்கங்களுக்காகத் தேவையானவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
- தனிப்பட்ட தரவு எவ்வாறு, ஏன் சேகரிக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து Nokia வெளிப்படையாகவும், தனிப்பட்ட நபர்களுடன் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும், இதில் தரவு, தனிநபரின் தனியுரிமை உரிமைகள் மற்றும் தரவு செயலாக்கப்படும் இடம் போன்றவற்றை அணுகக்கூடிய தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் ஆகியோர் அடங்குவார்கள்.
- தனியுரிமை மீறல்களுக்கான அபராதம் கணிசமானதாக இருக்கலாம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் சிவில் மற்றும் கிரிமினல் அபராதங்கள் நிறுவனத்துக்கும் உங்களுக்கும் விதிக்கப்படலாம்.
- Nokia இன் தனியுரிமைக் கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் கொள்கைகளை அறிந்து பின்பற்றவும் அதை **இங்கே** பார்க்கலாம்.
- நிறுவனத்திற்குள் தனிப்பட்ட தரவு சட்டப்பூர்வமாகப் பரிமாற்றப்படுவதற்கு, Nokia இன் பைண்டிங் கார்ப்பரேட் விதிகள் (BCRs) தனிப்பட்ட தரவுகளுக்கு போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கான எங்கள் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை விவரிக்கிறது. அனைத்து Nokia ஊழியர்களும் தனிப்பட்ட தரவு நாடுகளுக்கு இடையே பரிமாற்றப்படும் போதெல்லாம் BCR விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த உதாரணத்தைக் கவனியுங்கள்:

“பயனர்கள் தங்களது இணைய இணைப்பு அணுகலில் உள்ள சிக்கல்களைக் கண்டறிய உதவும் செயலியை உருவாக்கும் குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன். புவியியல் ரீதியாக எந்தப் பயனர்கள் மிகவும் ஆக்டிவாக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க, எனது சக ஊழியர்கள், பயனர்களின் GPS இருப்பிடத்தைச் சேகரிக்க விரும்புகிறார்கள். செயலியில் தரவு சேகரிப்புக்கான பொதுவான ஒப்புதல் உள்ளடங்கி இருந்தாலும், அது GPS இருப்பிடத் தரவை வழங்குவதிலிருந்து விலக்குப் பெறுவதைக் குறிப்பிடவில்லை. நான் தரவுப் பாதுகாப்புப் பிரச்சினையைத் தெரிவிக்க வேண்டுமா?”

“ஆம். செயலியின் செயல்பாட்டுக்கு GPS தரவைச் சேகரிப்பது அவசியமில்லை, மற்றும் இது வழங்கப்படும் முக்கிய சேவையைத் தாண்டி சேகரிக்கப்படுகிறது (பிரச்சினையைக் கண்டறியும் உதவி). GPS இருப்பிடத் தரவை மட்டும் மறுப்பதற்கான விருப்பம் பயனர்களுக்கு வழங்கப்படாததால், எல்லாத் தரவுச் சேகரிப்புக்கும் அவர்கள் ஒப்புதல் அளிக்காத வரை, அவர்கள் செயலியைப் பயன்படுத்த முடியாது. எனவே, ஒப்புதல் முழுமையாக வழங்கப்பட்டதாகக் கருத முடியாது, எனவே அது செல்லாது.”

கட்டுப்பா-
ட்டாளர் பதவி

கொள்கை கண்ணோட்டம்

தனது கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் நிதித் தரவுகள் துல்லியமாக இருப்பதை உறுதிசெய்ய நோக்கியா முறையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாகவும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், அதன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், அதன் பரிவர்த்தனைகளைச் சரியான நேரத்தில் மற்றும் புறநிலை முறையில் அறிக்கையளிப்பதற்கும் பொருத்தமான கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துகிறது.

Nokia அதன் நிதிக் கணக்கீட்டை நிர்வகிக்கும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடக்கவும் அரசாங்க நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிக்கை அளிக்கவும் உறுதிபூண்டுள்ளது.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாங்கள் எங்கள் சொத்துக்களைப் பாதுகாக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- தவறான செலவுகள் மற்றும் கொள்முதல் ஆர்டர்கள் அல்லது தவறான நேரத் தாள்கள் மற்றும் வவுச்சர்கள் உள்ளிட்ட நிதிப் பரிவர்த்தனைகள் தவறான தேதியுடன் அல்லது தவறான விளக்கத்துடன் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- அடிப்படை வணிக உணர்வை அளிக்காத பரிவர்த்தனைகள், சிறந்த வணிகப் பொருளாதாரத்துடன் பொருந்தாத முடிவுகள் அல்லது உண்மையான வணிக செயல்திறனுடன் ஒத்துப்போகாத நிதி சார்ந்த முடிவுகள்.
- ஒரு பரிவர்த்தனை அல்லது பணியாளரின் அதிகார நிலைக்கு முரணான செயல்களுக்கு பொருத்தமான மதிப்பீடுகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள்.
- இழப்பு அல்லது திருட்டுக்கு எதிராக சரியான முறையில் பாதுகாக்கப்படாத பௌதிகச் சொத்துக்கள் அல்லது சரியான அங்கீகாரமின்றி ஒரு சொத்தை அப்புறப்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும்.
- குறிப்பாகப் பணம் சம்பந்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில், காசோலைகளில் இரட்டை கையொப்பங்கள் அல்லது செலவுகளுக்குத் தேவையான ஒப்புதல்கள் போன்ற பரிவர்த்தனைகளின் மீதான கட்டுப்பாடுகள் இல்லாமை.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- ஒரு முழுமையான தணிக்கை பாதையை உறுதி செய்ய Nokia வின் நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் சொத்துக்கள், இயக்க அளவீடுகள் மற்றும் முடிவுகள் உள்ளிட்ட முழுமையான மற்றும் துல்லியமான பதிவுகளைப் பராமரிக்கவும்.
- அறிவார்ந்த சொத்து உள்ளிட்ட Nokia வின் நிதி, பௌதிக மற்றும் தகவல்சார் சொத்துக்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒரு ஆவணத்தில் கையொப்பமிட அல்லது ஒரு பரிவர்த்தனைக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு, தகவலின் உண்மைகள் மற்றும் முழுமையான தன்மையைச் சரிபார்க்கவும், ஒப்புதலுக்காக அடிப்படை வியாபார நியாயத்தைக் கருத்தில் கொள்ளவும்.
- Nokia வின் கணக்குப்பதிவு மற்றும் தக்கவைத்தல் நடைமுறைகள் மற்றும் பிற பொருந்தக்கூடிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்படுவதை உறுதிசெய்யுங்கள்; சந்தேகம் இருந்தால், கேளுங்கள்.
- மோசடிப் பதிவுகளை உருவாக்கவோ, ஆவணங்களை தவறாக்கவோ அல்லது உண்மைகள், பரிவர்த்தனைகள் அல்லது நிதித் தரவுகளைத் தவறாகச் சித்தரிக்கவோ வேண்டாம். நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருங்கள்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

> இந்த ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட பட்ஜெட் முழுவதையும் எனது குழு பயன்படுத்தவில்லை. அடுத்த ஆண்டு அதே நிதித் தொகையைத் தக்க வைத்துக் கொள்ள, அடுத்த ஆண்டு திட்டங்களில் ஒன்றிற்கு இந்த ஆண்டு முன்கூட்டியே Nokia விற்கு பில் செய்யும்படி ஒரு விற்பனையாளரிடம் கேட்பது ஏற்கத்தக்கதா?

> இல்லை. இது எங்கள் புத்தகங்கள் மற்றும் பதிவுகளில் பதிவுசெய்யப்பட்ட செலவுகளை பொய்யாக்குவதற்கும், நிறுவனம் எப்போது இந்தச் செலவைச் செய்யும் என்பதை தவறாக சித்தரிப்பதற்கும் சமமாகும். சட்டத்திற்கு துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரித்தல் தேவைப்படுகிறது, மேலும் நிறுவனம் குறிப்பிடத்தக்க அபராதங்களை எதிர்கொள்ளக்கூடும்.

அறிவுசார் சொத்து மற்றும் ரகசி-யத் தகவல்கள்



கொள்கை கண்ணோட்டம்

Nokia ஆனது கண்டுபிடிப்புகளில் முதலிட்டு, சன்மானங்களை ஈட்டுகிறது.

Nokia வின் அறிவுசார் சொத்து - இதில் காப்புரிமைகள், மென்பொருள் மற்றும் பிற பதிப்புரிமை பெற்ற பொருட்கள்; திறன்-அறிதல் மற்றும் வர்த்தக இரகசியங்கள் ஆகியவை அடங்கும்; மற்றும் பிராண்டுகள் மற்றும் வர்த்தக முத்திரைகள் - அதன் மிக மதிப்புமிக்க சொத்துகளில் ஒன்றாகும்.

நமது அறிவார்ந்த சொத்துக்களைத் தீவிரமாகப் பாதுகாத்துக்கொள்கிறோம், நமது அறிவார்ந்த சொத்து மற்றும் ரகசியத் தகவலுக்கான Nokia வகைப்பாடு மற்றும் வழிகாட்டுதல் நெறிமுறைகளைப் பின்பற்றுகிறோம். மற்றவர்களின் சரியான அறிவுசார் சொத்து மற்றும் ரகசியத் தகவலை நாம் மதிக்கிறோம்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாங்கள் எங்கள் சொத்துக்களைப் பாதுகாக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- சரியான அங்கீகாரமின்றி இன்னொரு நபர் அல்லது நிறுவனத்திற்கு சொந்தமான யோசனைகள், பொருள் அல்லது தகவல்களைப் பெறுதல் அல்லது பயன்படுத்துதல், இதில் படங்களை நகலெடுப்பது அல்லது பயன்படுத்துவது, திறந்த மூல மென்பொருள், வெளியாட்களிடமிருந்து கோரப்படாத யோசனைகள் அல்லது ஆன்லைன் மூலங்கள் அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட எழுத்துமூலப் பொருள் ஆகியவை அடங்கும்.
- உரிமங்கள், உரிமைகள், அல்லது எங்கள் அறிவுசார் சொத்து அல்லது பிற தகவல்களை அங்கீகாரம் இல்லாமல் வழங்குதல் அல்லது சட்ட மற்றும் இணக்கக் குழுவுடன் கலந்தாலோசிக்காமல் அறிவுசார் சொத்து அல்லது ரகசிய தகவல்களை ஏற்றுக்கொள்ளுதல்.
- கவனிக்கப்படாத அச்சுப்பொறிகளுக்கு முக்கியமான தகவல்களை அனுப்புதல், மற்றவர்கள் கேட்கும்போது ரகசிய தகவல்களை பகிரங்கமாக விவாதிப்பது அல்லது Nokia தகவல் வகைப்பாடு மற்றும் கையாளுதல் வழிமுறைகளின்படி பெயரிடாமல் எழுதப்பட்ட மூலப்பொருட்களை உருவாக்குதல்.
- மற்றவர்களால் Nokia வின் அறிவுசார் சொத்து அல்லது பிறரின் ரகசிய தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுதல், எடுத்துக்காட்டாக இதில் நோக்கியாவின் காப்புரிமை பெற்ற தயாரிப்புகள், செயல்முறைகள், சேவைகள், அல்லது வடிவமைப்புகளின் "ரிவர்ஸ் இன்ஜினியரிங்" பற்றிய தகவல்கள் இருக்கலாம். இத்தகைய தவறான பயன்பாட்டைப் பற்றி உடனடியாக சட்ட மற்றும் இணக்கக் குழுவிடம் புகாரளிக்கவும்.
- உங்களுக்கும் Nokia விற்கும் இடையிலான வெளிபடுத்தாமல் இருப்பதற்கான ஒப்பந்தம் அல்லது கண்டுபிடிப்பு ஒதுக்கீடு ஒப்பந்தத்தின் கீழ் உங்கள் கடமைகளை மதிக்கத் தவறுதல்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- அறிவுசார் சொத்து அல்லது இரகசியத் தகவல்களைக் கையாளுகையில், பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்:
  - இது யாருக்குச் சொந்தமானது? இதை நான் பயன்படுத்தலாமா?
  - இதை நான் யாருடன் பகிர்ந்து கொள்ளலாம்? இதன் மதிப்பை நான் எவ்வாறு பாதுகாப்பது?
  - எனது உரிமம் பெற்ற பயன்பாட்டுக் காலம் காலாவதியாகிவிட்டதா?
  - அப்படியென்றால், நான் எடுக்க வேண்டிய நடவடிக்கை ஏதாவது உள்ளதா?
- Nokia வுக்குச் சொந்தமான அறிவுசார் சொத்தின் கீழ் உரிமைகளை வழங்குவதற்கான அங்கீகாரம், குறிப்பாக காப்புரிமையின் கீழ் உள்ள உரிமைகள் கண்டிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளன, மேலும் நீங்கள் தேவையான உள் அங்கீகாரங்கள் இல்லாமல் அத்தகைய உரிமைகளை வழங்கக்கூடாது.
- தகவல்களை அவற்றின் பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கேற்ப வகைப்படுத்தி, அடையாள வில்லையிட்டு பாதுகாக்கவும்.
- Nokia வின் ரகசியத் தகவல்கள் மற்றும் வர்த்தக ரகசியங்களை அங்கீகரிக்கப்படாத வெளிப்படுத்துதல் மற்றும் தவறான பயன்பாட்டிலிருந்து பாதுகாக்க, வெளிப்படுத்துதல் மற்றும் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றினாலன்றி அத்தகைய தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் பகிர வேண்டாம்.
- நமது சொந்தச் சொத்துக்கு அளிக்கும் அதே அளவிலான கவனிப்புடனும் மற்றும் பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படியும் நாம் மற்றவர்களின் அறிவுசார் சொத்து மற்றும் ரகசியத் தகவல்களை மதிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும்.
- Nokia வின் செயல்முறைகளைப் பின்பற்றி, Nokia வின் அறிவுசார் சொத்துக்களை பாதிக்கக்கூடிய எந்தவொரு கருத்து வேற்றுமையின் மதிப்பீட்டையும் உள்ளடக்கிய நமது அறிவுசார் சொத்து மற்றும் ரகசிய தகவல் உரிமைகளை சரியான முறையில் புரிந்துகொண்டு, பாதுகாக்க மற்றும் செயல்படுத்த உங்களுக்கு உதவ அறிவுசார் சொத்து குழுக்களை ஈடுபடுத்தவும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

"ஒரு தொழில்நுட்ப சிக்கலைத் தீர்க்க நான் ஒரு யோசனையை உருவாக்கியுள்ளேன். யோசனை காப்புரிமையால் பாதுகாக்கப்பட வேண்டுமா என்று எப்படி அறிவது?"

"முதல் நடவடிக்கை Nokia கண்டுபிடிப்பாளர் மத்திய வலைப்பக்கமாக இருக்க வேண்டும், அங்கு கண்டுபிடிப்பு சமர்ப்பிக்கும் செயல்முறை, காப்புரிமை பாதுகாப்பு, கண்டுபிடிப்பாளர் அங்கீகாரம் மற்றும் பலவற்றைப் பற்றிய தகவல்களை நீங்கள் காணலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், Nokia வின் அறிவுசார் சொத்துக் குழுவை அணுகவும்."

உள்ளிருப்பவர் வணிகம்

கொள்கை கண்ணோட்டம்

நோக்கியா ஒரு பெரிய, உலகளாவிய, பொது வர்த்தக நிறுவனம். கிட்டத்தட்ட ஒவ்வொரு நாடும் அதன் மூலதன சந்தைகளைக் கட்டுப்படுத்துகிறது, மேலும் இதுபோன்ற விதிமுறைகளின் முக்கியக்கூறு, பரிமாற்றத்தில் வர்த்தகம் செய்யப்படும் பங்குகள் பற்றிய தகவல்களுக்கான சமமான அணுகலுடன் தொடர்புடையது.

பணியாளர்கள், தங்கள் பணியில், Nokia அல்லது பிற நிறுவனங்களைப் பற்றிய தகவலை அறியலாம். தனிப்பட்ட அல்லது நிதி ஆதாயத்திற்காக இந்த உள்ளடக்கத்தைப் பயன்படுத்துதல், எடுத்துக்காட்டாக பங்குகளை வாங்க அல்லது விற்க, அல்லது இந்த தகவலை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது, சந்தையின் நேர்மையை பாதிக்கிறது, எங்கள் கொள்கைகளை மீறுகிறது, மேலும் இது சட்ட மீறலாகவும் இருக்கலாம்.

பணியாளர்கள் கூடுதல் விபரங்களை **இங்கே** காணலாம்.

நாங்கள் எங்கள் சொத்துக்களைப் பாதுகாக்கிறோம்

எதில் கவனமாக இருக்கவேண்டும்

- பணியில் இருக்கும்போது அல்லது வேறு எங்கும் நீங்கள் கேள்விப்பட்ட அல்லது அறிந்துகொண்ட தகவல்களின் அடிப்படையில் ஒரு பங்கை வாங்குவது அல்லது விற்பது, அந்த தகவல் பகிரங்கமாக அறியப்பட்டவுடன் பங்கின் விலையை பாதிக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்.
- Nokia அல்லது பிற நிறுவனங்களைப் பற்றிய பொது-அல்லாத தகவல்களை,பின்னர் இந்தத் தகவலை நிதி வர்த்தகத்தில் பயன்படுத்தக்கூடிய நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது வணிக கூட்டாளிகள் போன்ற யாருடனும் பகிர்வது.
- Nokia அல்லது மற்ற நிறுவனங்களைப் பற்றிய பொருள், பொது அல்லாத தகவல்கள் உங்களிடம் இருக்கும்போது, நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது வணிக கூட்டாளிகள் போன்ற எவருக்கும் Nokia அல்லது பிற பத்திரங்களைப் பற்றிய "குறிப்பளித்தல்" அல்லது பரிந்துரைத்தல்.
- குறிப்பாக ஒரு முக்கிய நிறுவன அறிவிப்பு அல்லது வருவாய் வெளியீட்டில், உடனடியாக அல்லது அதற்கு முன்னதாகவே எந்தவொரு வர்த்தக நடவடிக்கைகளிலும் நீங்கள் ஈடுபடுதல். நீங்கள் நிதி அறிக்கையிடும் நபர் என்றால், Nokia உள்ளிருப்போர் கொள்கையில் வரையறுக்கப்பட்டபடி, நீங்கள் கொள்கையில் குறிப்பிட்டுள்ள திட்டமிட்ட கால அவகாசத்தைப் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

- உள்ளகத் தகவல் என்பது ஒரு நிறுவனம் அல்லது அதன் பங்குகள் தொடர்பான எந்தவொரு பொருள், பொதுவல்லாத தகவல்கள் ஆகும், இவை வெளிப்படுத்தப்பட்டால், அந்தப் பங்குகளின் விலையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் அல்லது பங்குகளை வாங்க, விற்க அல்லது வைத்திருக்க நினைக்கும் ஒருவரின் முடிவையும் இது பாதிக்கலாம்.
- உள் தகவலை வைத்திருக்கும் போது, ஊழியர்களுக்குப் பின்வரும் தடைகள் விதிக்கப்படுகின்றன:
  - நிறுவனத்தின் பத்திரங்களில் வர்த்தகம் (வாங்குதல் அல்லது விற்பனை செய்தல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ);
  - பத்திரங்களின் வர்த்தகத்தில் மற்றவர்களுக்கு பரிந்துரைத்தல் அல்லது ஆலோசனை அளித்தல்;
  - இது போன்ற உள் தகவல்களை மற்றொரு நபருக்கு வெளிப்படுத்துதல்.
- உங்கள் வேலையின் சாதாரணமான போக்கில் உள் தகவல்களை வெளியிடுவதற்கு முறையான வணிகக் காரணம் இருப்பதாக நீங்கள் நம்பினால், தயவுசெய்து அவ்வாறு செய்வதற்கு முன் சட்ட மற்றும் இணக்கக் குழு அல்லது தொடர்புடைய உள்ளிருப்பவர் திட்டத்தின் நியமிக்கப்பட்ட திட்ட உரிமையாளருடன் கலந்தாலோசிக்கவும்.

இந்த சூழ்நிலையைப் பற்றிச் சிந்தியுங்கள்:

"ஒரு சிறிய, பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்படும் ஒரு மென்பொருள் நிறுவனத்தை வாங்க Nokia பரிசீலித்து வருவதை எனக்குத் தெரியவந்துள்ளது. இது தனிப்பட்ட முறையில் எனக்கு பயனளிக்காது எனும் பட்சத்தில், இந்த நிறுவனத்தின் கையகப்படுத்தலை எதிர்பார்த்து சில பங்குகளை வாங்கக்கூடிய ஒருவருடன் இந்த தகவலை நான் பகிர்ந்து கொள்ளலாமா?"

"கூடாது. பொருள், பொது அல்லாத தகவல்களைப் பகிர்வது Nokia வின் நன்னடத்தைக் கோட்பாடு மற்றும் Nokia வின்கொள்கைகளை மீறுகிறது, பொதுவாக இது சட்டவிரோதமானது."

குரல் கொடுத்தல்

நமது நடத்தை விதிகளை மீறுவது நமது பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள்,பிற பங்குரிமையாளர்களுடன் நாம் உருவாக்கியுள்ள நம்பிக்கையை அரித்துவிடும். அத்துடன், விதிகளைப் பின்பற்றத் தவறினால் நமது சக பணியாளர்களையும் நமது வணிகத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்கக்கூடும். அனைத்து ஊழியர்களும் Nokia-வின் நற்பெயரைப் பேணிக்காக்கவும் நீதி, நற்பெயர் அல்லது சட்டப்பூர்வ எதிர்மறை தாக்கம் நீறுவனத்தின் மீது ஏற்படுவதற்கு முன்பு சாத்தியமுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக சந்தேகத்திற்குரிய விதி மீறல்களை உடனடியாக எழுப்பக் கடமைப்பட்டவர்கள்.

Nokia மீதோ, அதன் ஊழியர்கள் அல்லது அதன் வணிகத்தின் மீதோ தாக்கத்தை ஏற்படுத்துமெனில், மூன்றாம் தரப்பினர் சம்பந்தப்பட்ட கவலைகளைத் தெரிவிப்பதையும் Nokia ஊழியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக, Nokia-வின் இடத்தில் பணிபுரியும்போது விற்பனையாளரின் ஊழியர்களிடையே முறையற்ற நடத்தையும் இதில் அடங்கும்.

குரல் கொடுப்பதற்கு குறிப்பாக,
புண்படுத்தக்கூடிய விவகாரங்கள் அல்லது ஒரு தவறை ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பது, ஒன்று சரியானதாகத் தோன்றாதபோது தங்கள் கையை உயர்த்துவதற்காக ஊழியர்களைப் பாராட்டுவதற்கு தைரியம் தேவை என்பதை நாங்கள் ஏற்கிறோம். சங்கடப்படுத்துவதாக இருந்தாலும்கூட, குரல் கொடுப்பது நமது நன்னலனுக்காகவே.

Nokia-வின் பழிவாங்கலுக்கு எதிரான கொள்கை

நமது ஊழியர்கள் நடத்தை விதி மீறலுக்கான சாத்தியங்கள் குறித்த கவலைகளை எழுப்புவதில் சங்கடம் இன்றி உணரக்கூடிய கலாச்சாரத்தைப் பேண Nokia உறுதிகொண்டுள்ளது. நன்னம்பிக்கையுடன் ஒரு கவலை குறித்துக் குரல் கொடுக்கும் அல்லது அத்தகு கவலைக்கு ஆதரவாக ஆதாரத்தை வழங்கும் ஓர் ஊழியரை எந்தவகையிலும் எதிர்மறையாக நடத்துவதை Nokia சகித்துக் கொள்ளாது. எந்தவொரு ஊழியரும் இணக்கக் கவலையை எழுப்பியதற்காக இன்னொரு ஊழியரைப் பழிவாங்கவோ அல்லது பழிவாங்குவதில் பங்கெடுக்கவோ செய்தால் பணிநீக்கம் உட்பட அது வரையிலான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இரகசியமாகப் புகாரளித்தல்

கவலைகளை கீழே விவரிக்கப்பட்ட ஏதேனும் புகாரளிக்கும் சேனல்கள் வாயிலாக இரகசியமாக எழுப்பலாம். கவலைகளை நெறிகள் உதவி எண் மூலம் அநாமதேயமாக எழுப்பலாம் (எனினும் ஒரு சில அதிகார வரம்புகளுக்குள் அநாமதேயமாகப் புகாரளிப்பதில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன). நீங்கள் அநாமதேயமாகக் கவலைகளை எழுப்புவதாக இருந்தால், உங்கள் பெயரையோ அல்லது உங்களை அடையாளப்படுத்தும் பிற தகவல்களையோ அளிக்க வேண்டியதில்லை. Nokia அடையாள மறைப்பை மதிக்கிறது. அநாமதேயமாகப் புகாரளிப்பவர்களுடன் தொடர்புகொள்ள நெறிகள் உதவி எண் வழக்கு மேலாண்மை அமைப்பினை Nokia பயன்படுத்துகிறது. எனினும் நீங்கள் உங்கள் கவலை சம்பந்தமான போதிய விபரங்களை வழங்க வேண்டும். அப்போதுதான் Nokia முறையாக அதைத் தொடர்ந்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். போதிய விபரங்கள் இல்லாமல் அல்லது புகாரளித்த நபரிடம் மேற்கொண்டு கேள்விகள் கேட்க இயலாத நிலையில் விவகாரங்களை விசாரிப்பது சாத்தியமில்லை.

குரல் கொடுத்தல்

கவலைகளை நிவர்த்தி செய்தல்

ஒவ்வொரு கவலையையும் நாங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம். நெறிகள் மற்றும் இணக்கக் குழு முறையான தொடர் நடவடிக்கைக்காகவும் தீர்வுக்காகவும் உங்கள் கவலையை ஆய்வு செய்யும். இதில் முடிந்தவரை அந்த விவகாரத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்காக ஒரு ஆய்வாளரை அல்லது பிற துறைசார் நிபுணரை நியமிப்பது இருக்கும். இந்தக் குழு உங்கள் கவலையை துவக்கத்திலிருந்து தீர்வுவரை தடமறிந்து அதற்கு எச்சரிக்கையுடன் முழுக் கவனத்தைக் கொடுப்பதை உறுதிசெய்யும்.

விசாரணை முடிவில் Nokia உடன் பணிபுரியும் ஒரு ஊழியர் அல்லது மூன்றாம் தரப்பினர் பொருந்தக்கூடிய சட்டங்கள், கொள்கைகள் அல்லது Nokiya நடத்தை விதிகளை மீறியதாகத் தீர்மானிக்கப்பட்டால், ஒழுங்குமுறை நடவடிக்கை உட்பட திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். கவலையை எழுப்பியவரின் இரகசியத்தன்மையை நாங்கள் மதிக்கும் அதேவேளையில் நாங்கள் பின்னூட்டத்தைப் பகிரவும் முடிந்தபோது சரியாக இருக்குமிடத்தில் பரவலான வணிகத்தில் கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்வோம்.

திருத்த நடவடிக்கையும் ஒழுக்கமும்

நமது இணக்கத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக பயனுள்ள திருத்த நடவடிக்கை எடுப்பதும் முறையானதாக இருந்தால் ஊழியர் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதும் உள்ளது. உள்நாட்டுச் சட்டத்தைப் பொறுத்து, பணி நீக்கம் உட்பட அது வரையிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது பின்வருபவை உள்ளிட்ட ஏனைய பல காரணிகளைப் பொறுத்தது:

- அந்த நடத்தை உள்நோக்கம் உடையது அல்லது வேண்டுமென்றே அல்லது சட்ட மீறலுக்கு உட்பட்டது;
- அந்த நடத்தையில் நேர்மையின்மை, திருட்டு, மோசடி அல்லது தனிப்பட்ட ஆதாயம் உள்ளது;
- அந்த நடத்தை திரும்பத்திரும்ப நிகழ்வது அல்லது திட்டமிட்டு அல்லது மூடி மறைப்பதற்கான முயற்சிகள் உள்ளது;
- விசாரணையில் ஊழியரின் முழுமையான ஒத்துழைப்பு (அல்லது குறைபாடு).
- நிறுவனத்துக்குள் ஊழியரின் பணி மூப்புநிலை

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் முன்பாக அதுவரை பரிசீலிக்கப்படாத தொடர்புடைய கூடுதல் தகவல்கள் ஏதேனும் இருந்தால் வழங்குவதற்கு ஊழியர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.

குரல் கொடுத்தல்

குறைகேள் திட்டம்

Nokia-வின் குரல்கொடுக்கும் கலாச்சாரமும் பழிவாங்கலுக்கு எதிரான கொள்கையும் ஊழியர்கள் இணக்கக் கேள்விகளையும் கவலைகளையும் வெளிப்படையாக எழுப்பவும் விவாதிக்கவும் வழிகாட்டுதலை நாடவும் அதிகாரமளிக்கிறது. குறைகேள் திட்டம் நமது இணக்கத் திட்டத்திலும் கலாச்சாரத்திலும் ஒரு முக்கியமான கூறு. இது நியாயம், சமத்துவம், மரியாதை, நேர்மை கொண்ட சூழலை ஆதரிக்கவும் வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டது. இதில் ஒவ்வொருவரும் நாணயம் தவறாமல் செயல்படுவது எதிர்பார்க்கப்படுகிறது.

Nokia உள்நாட்டு குறைகேள் தலைவர்கள் அடங்கிய ஓர் உலகலாவிய வலைத்தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் இணக்க விவகாரங்களில் ஊழியர்களுக்கு பாரபட்சமின்றி இரகசிய வழிகாட்டுதலை வழங்குவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டவர்கள்.

Email **ombuds@nokia.com**

குரல் கொடுப்பதற்கான சேனல்கள்

குறைகேள் தலைவர்கள் என்போர் மேலாளர்கள்,சட்டம் மற்றும் இணக்கம், மக்கள் அமைப்புகளுடன் கூடவே இணக்கக் கவலைகளை எழுப்புவதற்கான கூடுதல் சேனல்கள். கவலைகளை Nokia நெறிமுறைகள் உதவி மின்னஞ்சல் மூலமாகவோ, உங்கள் டெஸ்க்டாப்பில் உள்ள நெறிமுறைகள் உதவி ஐகான் அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம். நீங்கள் நமது தலைமைச் செயல் அதிகாரி அல்லது நமது இயக்குநர் குழுவுக்கும்கூட எழுதலாம். புகாரளிக்கப் பயன்படுத்திய சேனல்கள் எதுவாக இருந்தாலும், அனைத்துக் கவலைகளும் பாரபட்சமின்றி, இரகசியமாக மற்றும் முடிந்தால் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

குரல் கொடுத்தல்

நீங்கள் பேசும்போது, நாங்கள் கேட்கிறோம்

ஆன்லைன்

https://nokiacms.i-sight.com/portal

இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் Nokiaவின் நெறிமுறை உதவி இணைப்பை அணுகலாம். Nokia ஊழியர்கள் தங்கள் கணினியில் உள்ள "நெறிமுறை உதவிமையம்" டெஸ்க்டாப் ஐகானைக் கிளிக் செய்வதன் மூலம் அதை அணுகலாம்.



தொலைபேசி

https://nokiacms.i-sight.com/portal/dialing-instructions

நீங்கள் மிக வசதியாக உணரும் மொழியில் அழைப்பைச் செய்ய இருக்கக்கூடிய மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

மின்னஞ்சல்

ethics@nokia.com

ombuds@nokia.com

இணக்கம் தொடர்பான கேள்வி அல்லது பிரச்சினையைத் தெரிவிக்க இந்த முகவரிகளில் ஒன்றிற்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

நீங்கள் தொடர்புகொள்ளக் கூடிய நபர்கள்

நேரடி மேலாளர்கள்: ஒரு குறை பற்றி புகாரளிக்க அல்லது இணக்கம் குறித்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க உங்கள் வரி மேலாளர் அல்லது Nokia வில் உள்ள எந்தவொரு வரி மேலாளரையும் நீங்கள் அணுகலாம்.

சட்டம் மற்றும் இணக்கக் குழு: வணிகக் குழு மற்றும் பிராந்திய இணக்கத் தலைவர்கள் **உட்பட**சட்டம் & இணக்க குழுவினர், உதவி செய்வார்கள்

மக்கள் அமைப்பு: மக்கள் அமைப்பு என்பது ஊழியர்கள் கவலைகளை எழுப்பக்கூடிய மற்றொரு வழி ஆகும்.

குறைதீர்ப்பு தலைவர்கள்: குறைதீர்ப்புத் தலைவர்கள் நடுநிலையானவர்கள் மற்றும் இரகசியமானவர்கள். இவர்கள் இணக்கக் கேள்விகள் மற்றும் கவலைகளுக்கு உதவ முடியும்.

Nokia OYJ
Karakaari 7
02610 Espoo
Finland

nokia.com/about-us/code-of-conduct/

About Nokia
Nokia வில் நாங்கள் உலகம் ஒன்றிணைந்து செயல்பட உதவும் தொழில்நுட்பங்களை உருவாக்குகிறோம்.

B2B தொழில்நுட்பத்தில் புதுமையை புகுத்துவதில் முன்னணியில் இருக்கும் நாங்கள், ஒவ்வொரு துறையிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் முழு பயன்களை பெறுவதற்கு நெட்வொர்க்கும் கிளவுட் தொழில்நுட்பமும் இணைகின்ற இடங்களில் நாங்கள் எதிர்காலத்திற்கு முன்னோடியாக இருக்கிறோம்.

எதிர்காலத்திற்கான டிஜிட்டல் சேவைகள் மற்றும் செயலிகளை உருவாக்குவதற்கு உணரக்கூடிய, சிந்திக்கக்கூடிய மற்றும் செயல்படக்கூடிய நெட்வொர்க்குகள் மூலம் எங்களுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து செயல்படுகிறோம்.

Nokia is a registered trademark of Nokia Corporation. Other product and company names mentioned herein may be trademarks or trade names of their respective owners.

© 2023 Nokia